*2*

# கிறிஸ்துவைப் பற்றிய உண்மையான அறிவு

## (1:3–21)

### இனிவரும் ஜீவனுக்கும் தேவபக்திக்குமுரியவைகள் *(1:3-9)*

***3**தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவ பக்திக்கும் வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினதுமன்றி. **4**இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும்பொருட்டு மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப் பட்டிருக்கிறது. **5**இப்படியிருக்க நீங்கள் அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாய் உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும், தைரியத்தோடே ஞானத்தையும், **6**ஞானத்தோடே இச்சையடக்கத்தையும், இச்சையடக்கத்தோடே பொறுமையையும், பொறுமையோடே தேவ பக்தியையும் **7**தேவபக்தியோடே சகோதர சிநேகத்தையும், சகோதர சிநேகத்தோடே அன்பையும் கூட்டி வாழுங்குங்கள். **8**இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து பெருகினால், உங்களை நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும் கனியற்றவர்களுமாயிருக்க வொட்டாது, **9**இவைகள் இல்லாதவன் எவனோ, அவன் முன்செய்த பாவங்களறத் தான் சுத்திகரிக்கப்பட்டதை மறந்து கண் சொருகிப்போன குருடனாயிருக்கிறான்.***

பேதுரு கள்ளப் போதகர்களை எதிர்கொள்ளும் பணிக்கு தயாரானார். முதலாவதாக, அவர் தமது வாசகர்களுக்கு அப்போஸ்தலிக செய்தியை முற்றும் போதியளவுக்கு பெற்றிருக்கிறார்கள் என்பதை நினைப்பூட்டினார். அவர்கள் தேவனோடு கூடிய ஜீவனைக் கண்டு கொண்டவர்கள்; தொடர்ந்து ஆவிக்குரிய வளர்ச்சிக்கான ஆதாரக் குறைவு அவர்களுக்கு இல்லை. கிறிஸ்தவர்களை இணங்கவைக்க தங்களிடம் அதிகமாக இருப்பதாக கள்ளப் போதகர்கள் காட்டிக்கொள்வதில்தான் அவர்களுடைய வெற்றி அமைந்திருந்தது: அவர்களுடைய அறிவு அப்போஸ்தலர்களைக் காட்டிலும் அதிகமானது (என்று எண்ணிக் கொண்டிருந்தனர்.) பேதுரு அவை எல்லாவற்றையும் மறுத்தார். அவர் கள்ளப் போதகர்களைத் தமது பேனாவின் முதல் தாக்குதலிலேயே அடித்து வீழ்த்த முயற்சிக்கவில்லை. கிறிஸ்துவின் செய்தியை நேர்மறையில்

ஒப்புவிக்க கள்ளப் போதகங்களின் அனைத்து சிக்கல்களையும் அறிந்திருக்க வேண்டிய அவசியமில்லை. அவருடைய முதல் வார்த்தைகள் நம்பிக்கையளிக்கும் வார்த்தைகளாயிருந்தன.

***வசனம் 3.*** NASB இந்த வசனத்தை வசனம் 2ன் விரிவாக்கமாக புரிந்து கொண்டுள்ளது. மற்ற மொழிபெயர்ப்புகளான, NRSV, இந்த இடத்தில் புதிய பத்தியை தொடங்குகிறது, வசனம் 5ல் வரும் அறிவுரைகளை முன்பாக விளக்குகிறது. வாக்கிய அமைப்பு எந்த வகையில் எடுத்தாலும் இலக்கண ரீதியில் ஒழுங்கற்றதாயிருக்கிறது; ஆகிலும், NASB வாசிப்பது சாலச் சிறந்தது. வசனம் 3 அதற்கு முந்திய வசனத்தின் கருத்தைத் தொடர்கிறது, (தேவனைக் குறித்து) அறிவு, ஒரு பொழிப்புரைக் கருத்தல்ல, என்று பேதுரு உறுதிப்படுத்தினார். அப்படிப்பட்ட அறிவின் மூலமாகத் தான் ***அவருடைய திவ்விய வல்லமையானது*** பெலன் செய்கிறது. “அறிவும்” “வல்லமையும்” இரட்டைக் கருத்துக்கள். இந்த நிருபத்தின் வாசகர்கள் (தேவனுடைய) அறிவைப் பெற்றிருந்தார்கள் இப்பொழுது அவர்கள் “அவருடை=ய திவ்விய வல்லமையையும்” அறிவார்கள். “திவ்விய வல்லமையானது” இந்தக் கிறிஸ்தவர்களுக்கு ***ஜீவனுக்கும் தேவ பக்திக்கும் வேண்டிய யாவற்றையும் தந்தது.*** “அறிவு” எனும் வார்த்தை வசனம் 2யும் மூன்றையும் இணைக்கிறது. அப்போஸ்தலர்களும் பேதுருவும் கொண்டு வந்த சாட்சியங்களின் “அறிவில்” குறைவு இருக்க வில்லை.

2:1ல் பேதுரு அறிமுகப்படுத்திய கள்ளப் போதகர்கள் அவர்களுடைய ஆசிரியர்களே அறிந்திராத அறிவைப் பெற்றிருப்பதாக நினைத்துக் கொண்டிருந்திருக்கின்றனர். அவர்கள் பேதுருவையும் மற்ற அப்போஸ்தலர்களையும் காட்டிலும் மேலான அறிவைப் பெற்றிருந்ததாக கூறிக் கொண்டனர். பேதுரு அறிவை மட்டுப்படுத்துவதை புறக்கணித்தார். அப்போஸ்தலர்களின் செய்திமட்டுமே அறிவின் ஊற்றுக்கண் என்று சொன்னார். அப்போஸ்தலர்கள் சங்கீதக்காரனின் நம்பிக்கையை எதிர் ஒலிப்பவர்களாயிருந்தனர், அவன், “தேவன் என் பட்சத்தில் இருக்கிறார் என்று அறிவேன்” என்பதாக எழுதினான் (சங்கீதம் 56:9). தேவனுடைய காரியம் அவர் வெளிப்படுத்தின அறிவின் எல்லைக்குள் அவருடைய ஜனங்கள் வாழும் வரை செழித்து ஓங்கிக் கொண்டேயிருக்கும். “தேவனுக்கு அஞ்சி, அவருக்கு முன்பாகப் பயந்திருப்பவர்களே நன்றாயிருப்பார்கள் என்று அறிந்திருக்கிறேன்” (பிரசங்கி 8:12).

“திவ்விய வல்லமை” இந்த கிறிஸ்தவர்களுக்குள்ளே இரண்டு வழிகளில் உணரப்படுகிறது. முதலாவதாக, அவர்கள் “ஜீவனைக்” கண்டடைகிறார்கள். “ஜீவன்” என்பது ஆவிக்குரிய,தொட்டு அறிய முடியாத நன்மைகளை கிறிஸ்தவர்கள் அனுபவிக்கக் கூடும், அதில் பாவங்களுக்கு மன்னிப்பும், நித்திய ஜீவனைக்குரிய நம்பிக்கையும், தேவனோடு சமாதானமும், மற்றும் ஆத்துமா அமைதியையும் உள்ளடக்கும். இரண்டாவதாக, “ஜீவனோடு” சம்பந்தப்பட்டது ஒழுக்கரீதியான முக்கியத்துவம் கொடுக்கப்படும் கிறிஸ்தவ ஜீவியம். பக்தியுள்ள ஒரு வாழ்க்கை “தேவபக்தியின்” விளைவை “திவ்விய வல்லமையிலிருந்து” கொடுக்கப்படுகிறது, இந்த செய்தியின் மூலம், பேதுருவின் வாசகர்கள் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப் பெற்றார்கள், அது தேவனோடு சஞ்சரிப்பதில் கொண்டு போய் விட்டது. கூடுதலாக, அவர்கள் எப்படி தேவ

பக்தியின் முறையில் வாழ்ந்து தேவனுடைய மகத்துவத்தைப் பெறுவது என்று அறிந்து கொண்டனர். அப்போஸ்தலர்களின் செய்தி முதல் நூற்றாண்டில் எப்படி சகல ஆவிக்குரிய தேவைகளையும் சந்திக்கப்போதுமானதாக இருந்ததோ அதே போல இருப்பத்தியோரம் நூற்றாண்டுக்கும் போதுமானதாயிருக்கிறது. தேவனுடைய முன்னளிப்பு மற்றும் ஆவியின் ஏவுதல் மூலம், கிறிஸ்தவர்கள் அப்போஸ்தலிக செய்தியை புதிய ஏற்பாட்டில் கொண்டுள்ளனர்.

அப்போஸ்தலிக செய்தியை கவனித்துக் கேட்ட இந்த கிறிஸ்தவர்கள் அனுபவித்த எல்லா ஆசீர்வாதங்களும் தேவனால் முன்வந்து கொடுக்கப்பட்டவை. **அவர்தான் நம்மை அழைத்திருக்கிறார்,** நாம் அவருக்கு பின்னாகப் போகவில்லை. தமது சிருஷ்டிகளின் வாழ்விலே அவருடைய நோக்கங்கள் உணரப்படும்போது தேவன் மகிமைப்படுத்தப்படுகிறார்; இப்படியாக தேவனுடைய அழைப்பு **அவருடைய சொந்த மகிமைக்காகவும் உயர்ந்த மாட்சிமைக்காகவும்** அவரால் செயல்படுத்தப்பட்டது. "மகிமை" எனும் வார்த்தை கிறிஸ்துவின் மகிமை 1:17ல் பேதுரு நினைவுகூருகிற மலைச் சம்பவம் முன்னளிக்கப்பட்டது. இந்த வார்த்தையான "உயர்சிறப்பு" (*aretē*) கிரேக்கம் பேசும் உலகில் ஒரு பொதுப் படையான சொல், ஆனால் அது புதிய ஏற்பாட்டில் ஐந்து முறை மட்டுமே காணப்படுகிறது. அவற்றில் மூன்று இந்த வசனப்பகுதியில் மூன்று முறை காணப்படுகிறது, ஒருமுறை இங்கும், 1:5ல் இரண்டு முறையும், சொல்லப்பட்டுள்ளது, வேறு இரண்டு சம்பவங்கள் 1 பேதுரு 2:9 மற்றும் பிலிப்பியர் 4:8. இந்த வார்த்தையின் பொருள் ஒழுக்கரீதியான நேர்மை மற்றும் நடத்தையில் சரியான உத்தமத்தன்மையைக் குறிக்கும். தேவனுடைய அழைப்பில் ஜனங்கள் அவருடைய நாமத்தைத் தரித்துக் கொண்டு அவரை மகிமைப்படுத்த வேண்டும், தேவனுடைய சுய நற்குணம், நீதி மற்றும் இரக்கம் உணரப்பட வேண்டும்.

**வசனம் 4.** "தம்முடைய வல்லமையின் மகிமையினாலும் காருண்யத் தினாலும்," தேவன், **மேன்மையும் அருமையுமான "வாக்குத்தத்தங்களையும்"** நமக்கு அளிக்கிறார். பேதுரு எந்த வாக்குத்தங்களை மனதிற் கொண்டு சொன்னார் என்பது தெளிவாகச் சொல்லப்படவில்லை, பழைய ஏற்பாடு முழுவதிலும் சொல்லப்பட்ட "வாக்குத்தத்தங்களை" ஒருவேளை அவர் நினைவுகூர்ந்திருக்கலாம். தேவன் வாக்குத்தத்தங்களை நோவா, ஆபிரகாம், மோசே, தாவீது, ஏசாயா, மற்றும் பிற தீர்க்கதரிசிகள் மூலமாகச் செய்தார். யுத்த நேரத்திலும் சிறையிருப்புக் காலங்களிலும், தேவனுடைய வாக்குத்தத்தம் இஸ்ரவேலர்களை தாக்குப்பிடித்து நிற்கக் செய்திருந்தது. அந்த "வாக்குத்தத்தங்கள்" அவர்களுடைய நன்மைக்காக "இப்பொழுது உணரப்படுகிறது" என்று பேதுரு தமது வாசகர்களுக்கு நினைப்பூட்டுகிறார். கிறிஸ்து உலகிற்கு வந்த போது, தேவன் "வாக்குத்தத்தங்களை" "அளித்து," மனுஷர்களுக்கு வெளியாக்கினார்.

ஒரு இரண்டாவது சாத்தியக்கூறு என்னவெனில், கிறிஸ்துவின் வாக்குத்தத்தம் தமது சீஷர்களுக்கு மறு நம்பிக்கையைக் கொடுத்தவை. இப்படியாக கிறிஸ்தவர்கள் கர்த்தருடைய மறுவருகையையும், அவபக்தியானவர்களுக்குக் கொடுக்கும் நியாயத்தீர்ப்பு, புதிய வானம் புதிய பூமியின் ஸ்தாபிதம் ஆகியவற்றை எதிர்பார்த்துக் கொண்டுள்ளனர். பின்னர் இந்த வாக்கியத்தில் பின்பகுதியில் வாக்குத்தத்தங்களை அளிப்பது

*"திவ்விய இயல்பில்" என்பதால் அவர்கள் பகிர்ந்து கொள்வதும், இந்த வாக்குத்தத்தங்கள் அனைத்தும் பழைய ஏற்பாடு முழுவதும் கொடுக்கப்பட்டது என்பதையும் புரிந்து கொள்வது சிறந்தது.*

*வாக்குத்தத்தங்கள் அளிக்கப்பட்டதும், இயேசுவின் நபர்த்துவத்தில் அவைகள் நிறைவேறுதலும், பேதுருவின் வாசகர்களை **திவ்விய சுபாவத்துக்கு பங்குள்ளவர்களாக்கியது**. கிறிஸ்தவனாக ஒருவன் மாறுவது தேவனுடைய "சொந்த மகிமையையும் மேன்மையையும்" பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற பொருளில் அப்போஸ்தலன் எழுதினார் என்று தோன்றுகிறது. விசுவாசிகள் எப்படி தேவனுடைய சுபாவத்துக்கு பங்குள்ளவர்களாகிறார்கள்? இதற்கு அநேக சாத்தியக்கூறுகள் இருக்கின்றன.*

*(1) ஒருவேளை பேதுரு மனிதனாக இருப்பவன் திவ்விய சுபாவத்துக்கு பங்குள்ளவனாக இருக்க வேண்டும் என்பதைக் கவனிக்க விரும்பியிருக்கலாம். அவர் தமது வாசகர்கள் தாங்கள் சிருஷ்டிக்கப்பட்ட நோக்கத்திற்கு ஏற்ப தங்களுடைய வாழ்க்கையை பிரதிபலிக்க வேண்டுமென்று அவர்களை வேண்டிக் கொண்டிருக்க வேண்டும். தேவன் அவர்களை தமது பங்காளிகளாக்கினார். தேவனுடைய பங்காளிகளைப் போல அவர்கள் நடந்து கொள்ள வேண்டியதிருந்தது.*

*(2) அப்போஸ்தலன் ஒருவேளை கிறிஸ்தவர்களுக்கு நினைவூட்டி அவர்கள் மறுபடியும் பிறந்தபோது - அதாவது, அவர்கள் பாவமன்னிப்பிற்கென்று ஞானஸ்நானம் பெற்று கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டபோது, இப்படியாக பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெற்றுக் கொண்டனர் (நடபடிகள் 2:38) - அப்பொழுது தேவனோடு அவருடைய சுபாவத்துக்கு பங்குள்ளவர்களானார்கள் என்று நினைவூட்டிக் கொண்டிருந்தார்.*

*(3) விசுவாசிகள் கிறிஸ்துவிலிருந்த சிந்தையைக் கொண்டிருக்க வேண்டும் என்ற பவுலின் வாக்கியம் ஒத்துப்போகக் கூடியதாக இருக்கலாம் (பிலிப்பியர் 2:5). இது சரியாக இருப்பின், "திவ்விய சுபாவத்துக்கு" பங்குள்ளவர்களாயிருத்தல் என்பது கர்த்தருடைய சிந்தைகளையும் நடத்தைகளையும் மனதில் கொண்டிருக்க வேண்டும் என்று அர்த்தப்படுகிறது. இதற்கு ஒப்பாக யோவான் சொல்லியிருக்கிறார், அது கிறிஸ்து மூலமாக விசுவாசிகள் தேவனுடைய பிள்ளைகளானார்கள் என்பதை உறுதிப்படுத்தியது (யோவான் 1:12).*

*(4) இன்னொரு சாத்தியக்கூறு பேதுரு பேசுவது எதிர்கால நிகழ்வுகளாகத்தான். தனது வாசகர்கள் கர்த்தர் மறுபடியும் வரும்பொழுது அவர்கள் பரலோக மகிமையிலே அவரோடே கூட ஐக்கியப்பட்டிருப்பார்கள் என்பதை நினைப்பூட்டினார். அப்பொழுது அவர்கள் "திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாயிருப்பார்கள்".*

*இந்தச் சாத்தியக் கூறுகளெல்லாம் கவர்ச்சியளிக்கும் அமைப்பைக் கொண்டிருக்கிற வேளையில், பேதுருவைப் பொறுத்தமட்டில், "திவ்விய சுபாவத்தில்" பங்குள்ளவர்களாகுதல் என்பது அதன் ஒழுக்க ரீதியான முக்கியத்துவம் வாய்ந்த விளைவுகளைக் கொண்டது என்பதைப் பின்வரும் வசனங்கள் தெளிவாக்குகிறது. கூடுதலாக, இப்பொழுது தான் அவர் ஜீவனுக்கும் தேவபக்திக்குமுரிய யாவற்றையும் தேவனுடைய வல்லமை அளித்திருப்பதாகக் குறிப்பிட்டார். இந்தக் காரணங்களால், "திவ்விய*

*சுபாவத்தில்" பங்குள்ளவர்களாகுதல் என்பது மேலே குறிப்பிடப்பட்டதில் இரண்டாவது கருத்துக்கு ஒத்துப்போவது போலுள்ளது. அதன் பொருள் புதிய பிறப்பை அனுபவிப்பதை பொருள்படுத்துகிறது. அவர் தனது வாசகர்களின் மனமாற்ற நிகழ்ச்சியை அவர்களுக்கு நினைவுபடுத்திய போது அவர்கள் "திவ்விய சுபாவத்துக்குப்" பங்குள்ளவர்களானார்கள் என்று குறிப்பிட்டார்.*

*"திவ்விய சுபாவம்" போன்ற சொற்றொடர்கள் பண்டைய கால கிரேக்கப் பண்பாட்டுச் சிந்தனை உலகிலிருந்து இரவல் வாங்கப்பட்டது போல் தோன்றுகிறது. கற்றறிந்த மனிதர்கள் மனிதனுடைய வாழ்வின் ஒழுங்கீன காரியங்களை விவாதித்தனர், பரம்பொருளை அறிய தன்னை அர்ப்பணம் செய்கிறதைக் குறித்த தத்துவ ஞானிகள் ஒரு சில ஆவிக்குரிய நிலையிலிருந்து தெய்வீகக் காரியங்களை கூர்ந்து கவனித்தல் மூலம் மாமிச ஒழுங்கீனங்களிலிருந்து ஒருவர் தப்பித்துக் கொள்ளலாம். என போதித்தனர். ஏனெனில் பேதுருவுக்கு "திவ்விய சுபாவத்தில் பங்கு பெறுதல் என்பது கிறிஸ்துவுக்குள் இருப்பதின் ஒரு பகுதியாக இருந்தது" வாக்குத்தத்தங்களை நிறைவேற்றியதன்மூலம், கிறிஸ்து மனித குலத்திற்கு தேவனிடத்தில் சமாதானத்தை ஏற்படுத்தி* **உலகத்தில் இச்சையினால் உண்டான கேட்டுக்குத் தப்பிக் கொள்ளச் செய்தார்.** *கூடுதல் வார்த்தையான "இச்சையினால்" என்பது பேதுரு ஒழுக்கக் காரியங்களில் கெட்டுப் போவதை மனதில் கொண்டு எழுதினார் என்பதையும், சரீரத்தினால் ஈடுபடுகிற கெட்டுப்போதலை குறிப்பதில்லை என்பதையும் யோசனையாய்ச் சொல்லுகிறது. பிற்பாடு 2:19, 20ல், அவர் உணர்ச்சிகளுக்கு அடிபணிந்து சிக்கிக்கொண்டு அடிமைகளாகும் ஜனங்களைக் குறித்து பேசுவார். "திவ்விய சுபாவத்துக்கு" பங்குள்ளவர்களாவதற்கு "உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பிக்கொள்ளுதல்" அவசியமாகிறது. இந்த ஒட்டுமொத்த காரியங்களும் ஒழுக்கக் காரியங்களுக்கு அடிப்படையாகிறது.*

*புதிய ஏற்பாட்டுக்காலம் முழுவதும் பலஸ்தீனாவிலும் அதன் எல்லைகளிலும் இருந்த அநேக யூதர்கள் பண்டைய கிரேக்கப் பண்பாட்டுச் சிந்தனை உலகில் மிகத் தாராளாமாக தங்களை சிக்கவைத்துக் கொண்டிருந்தனர். அப்போஸ்தலனும் கற்றறிந்த அவரின் உதவியாளரும் வேண்டுமென்றே பண்டைய கிரேக்கப் பண்பாட்டுத் தத்துவங்களை கைக்கொண்டு சுவிசேஷத்தை பண்டைய கிரேக்கப் பண்பாட்டுச் சிந்தையில் மூழ்கியிருந்த யூத சமுதாய விசுவாசிளுக்கு ஊழியம் செய்தனர்.*[1]

***வசனம் 5.*** *முந்திய வசனங்களில் வற்புறுத்தப்பட்ட காரியங்களை அடிப்படையாகக் கொண்டு, பேதுரு தொடர்ந்து ஒழுக்கக் காரியங்களை அறிவுறுத்துகிறார்:* **இப்படியிருக்க,** *[அவர்கள் செயல்பட வேண்டியது]* **அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாய் இருக்க வேண்டும்.** *பண்டைய கிரேக்கப் பண்பாட்டு பேச்சு நடையை கிறிஸ்தவ விசுவாசத்திற்கு தக்க வகையில் போதிக்க ஏதுவாக பேதுரு தன்னை ஆயத்தப்படுத்தியிருந்த நிலையில் தேவனுடைய அறிவினால் உண்டாகும் ஒழுக்கக் காரியங்களை விலக்கி வைப்பதுடன் திருப்தியடைந்துவிடவில்லை. ஜனங்கள் எப்படி நடத்துகொள்கிறார்கள் என்பது குறித்து தேவன் அக்கறையுள்ளவராயிருக்கிறார். கிரேக்க உலகில், ஒழுக்க சம்பந்தப்பட்ட காரியங்களுக்கும் பக்திமார்க்கத்துக்குமிடையேயான தொடர்புநிலை மிக இலேசானதாகவே இருந்தது. கிறிஸ்துவுக்குள்ளான ஜீவியத்தில், மிக மேன்மையான ஒழுக்கக் கொள்கைகளை அடிப்படையாகக்*

கொண்ட நடத்தை அவசியமானது, இயேசுவை மாதிரியாகக் கொண்ட ஜீவியம் இரண்டு காரியங்களைச் செய்தது: (1) அது தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்தியது. (2) அதை கைக் கொண்ட நபரை அது மேன்மைப்படுத்தியது. ஏனெனில் தேவன் கிறிஸ்தவர்களுக்கு தமது மாபெரும் வாக்குத்தத்தங்களைக் கொடுத்திருக்கிறார், ஏனென்றால் அவர்கள் ஒத்துப்போகக் கூடாத ஜீவியத்தை ஜீவிக்க ஏதுவாக "அதிக ஜாக்கிரதையை" பயன்படுத்தி, அவர்கள் "திவ்விய சுபாவத்தில்" பங்குள்ளவர்களாகிறார்கள்.

பண்டைய கிரேக்க உலகில், ஞானிகளும் கொள்கை வாதிகளான தத்துவ ஆசிரியர்களும் ஒழுக்கங்கள் மற்றும் துர்க்குணங்களின் பட்டியலை தங்கள் மாணவர்களுக்குக் கொடுப்பதை ஒரு நடைமுறை நிலையாகக் கொண்டிருந்தனர். பேதுருவும் பவுலும் தங்கள் நிருபங்களில் இதைப் பின்பற்றினர். 1 பேதுரு 3:8, 9 ல், அப்போஸ்தலன் தேவனைப் பிரியப்படுத்தும் காரியங்களை பட்டியலிட்டார், மேலும் 2:1லும் 4:3லும் துர்க்குணங்களையும் பட்டியலிட்டார். 2 பேதுருவிலும், கூட, அப்போஸ்தலன் தனது கரங்களைத் திருப்பி கிறிஸ்தவ நடக்கைகளை ஒழுங்குபடுத்த ஒழுக்கங்களின் ஒரு பட்டியலைக் கொடுத்தார். பேதுருவின் பட்டியல் விசாலமான கொள்கைகளை கையாளுகிறது. அவை சட்டரீதியான கட்டளையாயிருப்பதிலிருந்து வெகு தொலைவில் இருக்கிறது. ஒரு சட்டரீதியான கட்டளை தெளிவான எல்லைகளைக் கொண்டிருக்கும். உதாரணமாக, ஒரு கட்டளையில் ஒருவர் எருசலேமிலுள்ள தேவாலயத்துக்கு வருஷத்துக்கு ஒருமுறை போய் பஸ்காவை ஆசரிக்க வேண்டுமென கூறப்பட்டால், அதற்கு அவர் கீழ்ப்படிகிறாரா இல்லையா என்று கண்டு பிடிப்பது கடினமல்ல. ஒரு சட்டத்திற்குக் கீழ்ப்படிய வேண்டிய பொருள் மிகச் சிறியது. பேதுரு குறிப்பிட்ட தகுதிகள், ஒழுக்க பிரமாணத்தில் மிகப்பெரியவை. ஒருவர் எவ்வளவு கனம் பொருந்திய வாழ்வை வாழ்ந்திருந்தாலும், அவர், "அதோ, நான் செய்துள்ளேன். நான் விசுவாசத்தைச் செய்துள்ளேன். இப்பொழுது, ஒழுக்கத்தின் மேன்மையை செய்து கொண்டுள்ளேன்" என்று ஒருபோதும் சொல்ல இயலாது.

பேதுரு பட்டியலிட்டுள்ள ஒழுக்கத் தொடர்புகளை கிரேக்க மொழியிலிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பது கடினம். "விசுவாசத்தோடே ஒரு ஒழுக்கத்தைக் கூட்டுவது" (KJV) என்பது ஒரு ஒழுக்கத்தின் மேல் மற்றொன்றை அடுக்கி வைப்பது என்பதை ஆலோசனையாகச் சொல்லுகிறது. அது வார்த்தைகளுக்கு இடையேயான தொடர்பில் நெருக்கத்தை ஏற்படுத்துவதில்லை. NASB மொழிபெயர்ப்பு **in your faith supply moral excellence** என்கிறது. இதன் பொருள் என்னவெனில் ஒவ்வொரு ஒழுக்கமும் அடுத்த ஒழுக்கத்துக்கு முன்னேற ஒரு படிக்கல்லாயிருக்க வேண்டும் என்பதே. "விசுவாசத்தின்" மூலமாக மட்டுமே ஒருவர் "ஒழுக்கத்தின் மேன்மைக்கு" தொடர்ந்து போகிறார். "ஒழுக்கத்தின் மேன்மையிலிருந்து" ஒருவர் "அறிவுக்கு" கடந்து போகிறார்.

பேதுரு வரிசைப்படுத்திய பட்டியலில் சொல்லப்பட்ட வார்த்தைகள் ஒவ்வொன்றும் ஒரு புத்தகத்திற்கு பாடமாக சுலபத்தில் எழுத முடியும். அவர் அடைப்புக்குறியின் முன்பகுதியில் "விசுவாசத்தையும்" முடிவுப் பகுதியில் "அன்பையும்" குறிப்பிட்டுள்ளார். "விசுவாசத்தைக்" காட்டிலும் ஒரு கிறிஸ்தவனை மகிமைப்படுத்தும் வார்த்தைகள் வேறெதுவுமில்லை எனலாம்.

பவுல் கிறிஸ்தவ அடையாளத்திற்கான அஸ்திபாரமாக விசுவாசத்தைக் குறிப்பிட்டு அவர் எழுதினதாவது, "கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு" (எபேசியர் 2:8). "விசுவாசம்" என்பது ஒரு செயல்பாட்டுச் சொல். எபிரெயர் 11:1ல், அதன் ஆசிரியர் ஒரு சுருக்கமான விளக்கத்தைக் கொடுத்துள்ளார்: "விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது." பிறகு, அவர் தனது பிரயாசத்தின் குறைபாட்டைப் புரிந்து கொண்ட போதுதான், "விசுவாசத்தைக் குறித்து உனக்கு விளக்கிச் சொல்வதற்குப் பதிலாக, அது என்ன என்பதைக் காண்பிக்கட்டும். விசுவாசம் என்பது தனது செயலால் காண்பித்த ஆபேல். விசுவாசம் என்றால் ஏனோக்கு. விசுவாசம் என்றால் நோவா, விசுவாசம் என்றால் ஆபிரகாம்" என்றெல்லாம் சொல்வதாகக் காணப்படுகிறது. "விசுவாசம்" என்றால் மனரீதியான காணவோ தொடவோ கூடாத ஒரு உணர்வல்ல; விசுவாசத்தால் வெளிக் கொண்டுவரப்படுகிற குணாதிசயத்தை அது மிக நெருக்க கட்டுகிற ஒரு குணாதிசயம். அது பசியில் உள்ள ஒரு குழந்தையைப் போஷிப்பதோ ஞானஸ்நானத்தில் கர்த்தரை தரித்துக் கொள்ளுகிறதற்கென விசுவாசத்தின் கிரியைகளை புறந்தள்ளுகிற செயலோ அல்ல.

"விசுவாசத்தைக்" கொண்டு கிறிஸ்துவினிடத்தில் வந்திருக்கிற நிலையில், பேதுரு தன்னுடைய வாசகர்கள் விசுவாசத்திற்கடுத்த நற்குணத்தை அடைய ஒரு படிக்கல்லாக [moral excellence] "தைரியத்தையும்" *(aretē)* கூட்டிக் கொள்ளும்படி கேட்டுக் கொண்டார். 1:3ல், அப்போஸ்தலன் குறிப்பிடுகையில் தேவன் விசுவாசிகளைத் தமது சொந்த மகிமைக் கென்று தைரியத்தைக் கூட்டும்படி தெரிந்து கொண்டார். தேவன் காட்டிய அதே தைரியத்தில் கிறிஸ்தவர்களும் வளர வேண்டியவர்கள், இந்த வார்த்தை உறுதிப்படுதல், நம்பகத்தன்மை மற்றும் ஒழுக்க இசைவு ஆகியவற்றைக் குறிப்பிடுகிறது. ஒரு விசுவாசி தேவன் மீது தனது விசுவாசத்தை வைக்கும் போது இயல்பாக அது வளருகிறது.

**ஞானம்** என்பது பேதுரு எழுதிய சபைகளுக்குள் ஆக்கிரமித்துக் கொண்டிருந்த கள்ளப் போதகர்களுக்குத் தேவைப்படுகிற ஒரு முக்கியமான வார்த்தையாகும். அது அப்போஸ்தலனுக்கும் ஒரு முக்கியமான வார்த்தைதான், ஆகிலும் குறிப்பிடத்தக்க வகையில் அது பிரதானமானதும் அல்லது பட்டியலில் கடைநிலை வார்த்தையோ அல்ல. அஞ்ஞானிகளின் பட்டியலிடப்பட்ட நல்லொழுக்கங்களில், "ஞானம்" எனும் வார்த்தை முதன்மைத்துவத்தை பெற்றிருந்தது. 2 பேதுருவில், அது "விசுவாசம்" மற்றும் "தைரியத்திற்கு" அடுத்து வருகிறது. 1:2, 3ல் தேவனிடத்தில் விசுவாசம் வைத்து இரட்சிக்கப்படுவதற்குத் தேவையான ஞானத்தைப் பேதுரு குறிப்பிட்ட போது, அவர் *epignōsis*, எனும் வார்த்தையைப் பயன்படுத்தினார், ஒரு வகையில் அது ஒரு வலிமையான வார்த்தையாகும். இந்த வசனத்தில் குறிப்பிடுகிற "ஞானம்" எனும் வார்த்தை *(gnosis)* கிறிஸ்தவ வளர்ச்சிக்கு அனுமதிக்கிற அன்றாட செயலில் வரும் சொல்.

பேதுரு எதிர்கொண்ட கள்ளப்போதகர்களைப் போல, பவுல் கொரிந்துவிலிருந்த கிறிஸ்தவர்கள் தங்கள் "ஞானத்தால்" மயக்கமுற்றிருந்த நிலையைக் குறித்துப் பேசியிருந்தார். கொரிந்தியரை பவுல் கடிந்துகொள்கிறார். நாவு மேல் தாடையில் ஒட்டிக் கொள்ளத்தக்க

வகையில் பேசி அவர், "நம்மெல்லாருக்கும் அறிவு உண்டென்று நமக்குத் தெரியுமே" என்றும் தொடர்ந்து "அறிவு இறுமாப்பை உண்டாக்கும், அன்போ பக்திவிருத்தியை உண்டாக்கும்" என்றார் (1 கொரிந்தியர் 8:1). "விசுவாசத்திலே" தொடங்கி விசுவாசத்தினாலே தைரியத்தையும் பெறத்தக்க முன்னேற்றம் பெற்று, அதன் பிறகே கிறிஸ்தவ இலக்கிற்கான பாத்திரவான்களாக்கும் "ஞானத்தை" அடையும்படி கூறுகிறார். மேலும் "ஞானம்" (அறிவு) சுய உயர்வு மனப்பான்மைக்கு அழைப்பு விடுக்கிறதில்லை. ஞானம் மற்ற நல்லொழுக்கங்களுடன் உணரப்பட வேண்டிய ஒரு நற்குணம். அது மனுஷ சாயலில் தேவனை உண்டாக்குவதற்கோ அல்லது மனுஷசாயலுக்கு அவரை ஒப்பிடுவதற்கோ பயன்படும் ஒரு கருவியாக செயல்பட்டால் அது உண்மையான நல்லொழுக்கங்களில் ஒன்றாகாது.

**வசனம் 6.** மாறாக, **ஞானம்** தன்பாதையில் **இச்சையடக்கத்திற்கு** அடியெடுத்து வைக்கிறது. பேதுரு குறிப்பிடும் கிறிஸ்தவ நற்குணங்களுக்கும் பவுல் கூறும் "ஆவியின் கனிக்கும்" (கலாத்தியர் 5:22, 23) மூன்று பண்புகள் பொதுவாகக் காணுகின்றன. அவற்றில் இரண்டு பண்புகள் "விசுவாசம்" மற்றும் "அன்பு" ஆகியன. NASB யில் அது "விசுவாசமாயிருத்தல்" என்று கலாத்தியரில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட இரண்டு பட்டியலுக்குமிடையேயான பொதுவான பண்பு "இச்சையடக்கம்" *(enkrateia)*. புதிய ஏற்பாட்டில் *enkrateia* எனும் பதம் வருகிற ஒரே வசனப்பகுதி நடபடிகள் 24:25, அங்கே பவுல் தேசாதிபதி பேலிக்ஸிடத்தில் விவாதிக்கும் போது "நீதியையும், இச்சையடக்கத்தையும், இனிவரும் நியாயத்தீர்ப்பையும்" குறித்துப் பேசினார்.

தம்முடைய ஜனங்கள் தங்களுடைய ஆசை இச்சைகளைக் கட்டுப்படுத்தி தங்களின் திடீர் உணர்ச்சிவசப்படுதலை நிதானிக்க வேண்டுமென தேவன் விரும்புகிறார். அவருடைய எதிர்பார்ப்புகளெல்லாம் சாத்தியமானவைகளை செயல்படுத்தும் எல்லைக்குட்பட்ட காரியங்கள் மட்டுமே. ஜனங்கள் தங்கள் கோபத்தையும், தங்கள் இச்சைகளையும், தங்கள் சிந்தனைகளையும், தங்கள் நடத்தையையும் கட்டுப்படுத்தும் திராணியுள்ளவர்கள். பவுலோ பேதுருவோ இந்த நல்லொழுக்கத்தை கைக்கொள்வது சுலபம் என்று குறிப்பிடவில்லை. சிலர் மற்றவர்களைக் காட்டிலும் தங்களுடைய உணர்ச்சிகளை கட்டப்படுத்துவதில் மிகவும் கஷ்டப்படுகின்றனர். கோபப்படுவதையோ அல்லது வேறே சோதனைகளுக்குட்படுவதையோ நியாயப்படுத்துவதற்கேதுவான சம்பவம் எதுவுமில்லை. "இச்சையடக்கமுள்ளவராக" ஒருவர் மாற முதல் படி அது ஒரு நிஜமான எதிர்பார்ப்பு என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். தன்னைத் தான் கட்டுப்படுத்திக் கொள்ள முடியும் என்று முதலாவதாக ஒருவர் உணர வேண்டும்; பிறகு அதை அவர் செயல்படுத்த வேண்டும்.

"இச்சையடக்கம்" **பொறுமையாகிய** நல்லொழுக்கத்தைக் கூட்டுவதற்கு ஒரு அடித்தளமாக சேவை புரிகிறது, KJV எனும் மொழிபெயர்ப்பில் "பொறுமை" *(hupomonē)* என்பது "பொறுத்துக் கொள்ளுதல்" என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. அது உண்மையானது என்றாலும், "பொறுமையும்" "பொறுத்துக் கொள்ளுதலும்" அதன் அர்த்தத்தில் நெருக்கமானவை, "பொறுத்துக் கொள்ளுதல்" என்பது ஏமாற்றங்களை சந்திக்கிற போதோ எரிச்சலை உண்டாக்கும் நிகழ்ச்சிகள் கடுமையாகும்போதோ கையாளும்

பொறுமைத் தன்மையை பெரும்பாலும் குறிக்கும். "பொறுத்துக் கொள்ளுதல்" என்பது இந்த வகையில் பொருள்படுத்த வித்தியாசப்பட்ட கிரேக்க வார்த்தை தேவை. பேதுரு தெரிந்து கொண்ட வார்த்தை நீடியதன்மையை, உறுதிப்பட்டிருப்பதை, தரித்திருத்தலையும் குறிப்பதாக உள்ளன. இந்தப் பண்பு, கிறிஸ்தவர்களை ஏமாற்றங்களினூடே நடத்தி, சோதனைகளிலிருந்து தப்பிக்க அறைகூவல் விடுத்து, அவர்கள் அறிக்கையிட்ட விசுவாசத்தை தொடருவதற்கு உதவிகரமாயிருக்கிறது, "பொறுமை" என்பதற்கு பேதுரு பயன்படுத்தியுள்ள வார்த்தை கிரேக்கப்பதத்தில் ஒரு சிறப்பான பதம்.

விசுவாசத்தில் பொறுமையாயிருத்தல், ஒரு கிறிஸ்தவனை **தேவபக்தியைப்** பற்றிக் கொள்ள ஏதுவாக்குகிறது. இந்த வார்த்தை செயலில் காட்டுவதை விட அதிகமாக ஒருவருடைய இயல்பாக அமைவது. தேவன் எப்பொழுதும் தங்கள் அருகாமையில் இருப்பது போன்ற மனதைக் கொண்டிருப்பதை இது குறிப்பிடுகிறது. அது தேவ பக்தியுள்ள மனநிலை, தேவனை அது வாழ்க்கையின் அனைத்துப் பகுதிகளுக்கும் இட்டுச் செல்கிறது. ஒரு தேவபக்தியுள்ள மனுஷன் வணங்கிய தலையோடு எந்த கடினமான தெரிவுகளையும் செய்கிறான்; வாழ்க்கையின் சந்தோஷமும் வேதனையும் தேவனுடன் கை கோர்த்தபடி சந்திக்கப்படுகின்றன. இந்த வார்த்தையின் அளவு, "தைரியம் மற்றும்" "இச்சையடக்கத்தின்மேல்" கவிகின்றன. இந்த வார்த்தை சில வேளைகளில் "கிறிஸ்தவ தெய்வீகப் பற்று" மற்றும் "தேவதாபக்தி" என்றும் மொழிபெயர்க்கப்படுவதுண்டு. 1 தீமோத்தேயு 6:3ல் "தேவபக்திக்கேற்ற உபதேசங்கள்" என்று பவுல் பயன்படுத்தின வார்த்தை இதுவே. 1 தீமோத்தேயு 6:11ல் பவுல் குறிப்பிடும் நல்லொழுக்கங்களின் பட்டியலில் பவுல் "தேவ பக்தியை" யும் சேர்த்துக் கொண்டார்.

**வசனம் 7.** கற்பனையின் மேல் கற்பனையாக, பேதுரு **சகோதர சிநேகம்** எனும் வார்த்தைக்கு கடந்து போகிறார். ஒருவர் தனது அயலானுக்குக் காட்டும் துயர் நீக்கச் செயல்களும் அன்பான நடத்தையும் தேவனை அக்காட்சியிலிருந்து தள்ளிவிட்டு செயல்படுவதல்ல. நல்லொழுக்கங்களின் பட்டியல் குறிப்பிடத்தக்கது. பாங்கான பண்பும் இரக்ககுணமும் ஒருவர் தனது அயலார்களிடத்தில் காட்டுவது **தேவபக்தியின்** வளர்ச்சியால் தான். சகோதர சிநேகம் *(philadelphia)* எனும் மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தை பெரும்பாலான ஆங்கிலம் பேசுபவர்கள் அறிந்த வார்த்தையாகும், Pennsylvania விலுள்ள ஒரு மாபெரும் நகரம் தன்னை "சகோதர சிநேகப்பட்டணம்," Philadelphia என்று அழைத்துக்கொள்கிறது. இந்த வார்த்தை அனலும், உணர்ச்சிமிகு அன்பையும் சகோதர சிநேகத்தையும் இடையே கொண்டுள்ள பொருளையுடைய வார்த்தை அது தமது சீஷர்கள் ஒவ்வொரு மனுஷரிடத்திலும் அன்புகூர்ந்து, அவர்களை கனப்படுத்தி, மரியாதை செலுத்த வேண்டும் என்று இயேசு கிறிஸ்து போதித்தார்; ஆகிலும் சீஷர்கள் தங்களுடன் விசுவாசத்தை பகிர்ந்து கொள்வோரிடத்தில் ஒரு விசேஷித்த இருதய பூர்வமான இணக்கமுள்ளவர்களாயிருந்துள்ளனர். "... யாவருக்கும், விசேஷமாக விசுவாசக் குடும்பத்தார்களுக்கும், நன்மைசெய்யக் கடவோம்" என்று பவுல் நன்றாகச் சொன்னார் (கலாத்தியர் 6:10).

பட்டியிலிடப்பட்டுள்ள நல்லொழுக்கங்களில் கடைசி வார்த்தைக்கு விளக்கம் தேவையில்லை, அல்லது இந்த வார்த்தைக்குத் தான் மற்ற எல்லா

*வார்த்தைகளைக் காட்டிலும் அதிக விளக்கம் கொடுக்க வேண்டியதாகும். இந்த அனைத்து அருமையான நல்லொழுக்கங்களுக்கும்* ***அன்பே*** *ஒரு அடித்தளமாகும் என்று பேதுரு முடிவுரையாகக் குறிப்பிடுகிறார். இது எல்லா வார்த்தைகளுக்கும் மேலானது, கிறிஸ்தவ நடக்கைக்கான உச்சக்கட்ட நல்லொழுக்க வார்த்தையாக புதிய ஏற்பாட்டில் இது சொல்லப்படுகிறது. இயேசு குறிப்பிடுகையில் இது தான் தமது ஜனங்களுக்கு உச்சக் கட்ட மேன்மையானதாகக் கூறுகிறார் (யோவான் 13:35). கற்பனைகளெல்லாவற்றிலும், தேவனிடத்திலும் பிறனிடத்திலும் அன்புகூர வேண்டும் என்பதே பிரதானக் கற்பனை என்று சொன்னார் (மாற்கு 12:29-31). இந்த வார்த்தையின் ஆழத்தைத் தேடிப்பிடிக்க ஏதுவான வார்த்தைகளை ஞானிகள் புத்தகமாக எழுதியுள்ளனர். "அன்பு" என்றால் கண்கள் பணிக்கக் காட்டும் மென் உணர்ச்சி வசப்படுதலுக்கு மிகவும் மேலானது என்று நாம் ஒரு குறைந்தபட்சக் கருத்தைக் குறிப்பிடலாம். அது ஒருவர் தன்னை மற்றொருவருடைய ஸ்தானத்தில் வைத்து, அந்த நபர் பிரியப்படும் காரியங்களில் செயல்படுவது, அது தனக்கு எப்படிப்பட்ட அனுகூலமின்மையை ஏற்படுத்தினாலும் செயல்படுத்துவார். அது பிரதானமாக தன்னைக் காட்டிலும் பிறருடைய அக்கறைகளில் வழிநடத்துகிற தனிப்பட்ட அக்கறையை விடுத்து, பிறருடைய தேவைகளைப் பூர்த்தி செய்ய விளைய வைக்கிறதுமான வார்த்தை.*

***வசனம் 8.*** *அப்போஸ்தலன் பயன்படுத்தின மேற்குறித்த வார்த்தைகள் வெறும் கருத்துச் சொற்கள் மாத்திரமல்ல; அவர் பொது தத்துவக்கோட்பாட்டை பேசிக் கொண்டிருக்க வில்லை, தமது வாசகர்களை அவர் முன்னிலைச் சொல்லில் அழைத்து, இந்த ஒழுக்க நெறிகள் வேர்பிடிக்கும்போது அவை* ***உங்களை வீணரும் கனியற்றவர்களுமாயிருக்க வொட்டாது*** *என்று பேதுரு சொன்னார். தங்களைக் கிறிஸ்தவ பாளையத்துக்குள் இருப்பதாகச் சொல்லிக் கொள்ளும் சிலர் "வீணரும்" "கனியற்றவர்களுமாயிருப்பதாகக்" குறிப்பிட்டார் என்ற பொருளைக் கொடுக்கிறது. யாக்கோபு குறிப்பிட்ட, "கிரியையில்லாத விசுவாசம் செத்ததாயிருக்கிறது" என்பதன் பொருளும் இதுதான் (யாக்கோபு 2:20). ஒருவர் ஒருவேளை ஸ்தோயிக்க கொள்கையுடையவராக பொதுத் தத்துவக் கோட்பாட்டைக் கொண்டிருந்தாலும் கிறிஸ்தவம் அதைக் காட்டிலும் மிக அதிகமான கருத்துக்களையும் சரியான வார்த்தைகளையும் கொண்டிருக்கிறது,* Litotes *எனும் மொழிக்கருவி ஒரு கருத்தை அதன் எதிர் பதத்துக்கு முன்பாக உறுதிப்படுத்துகிறது. பேதுரு* Litotes *கருவியைப் பயன்படுத்துகிறார், நேர்மறையில் அவர் குறிப்பிட்டு, தனது செய்தியில் மேற்குறிப்பிட்ட நல்லொழுக்கங்களெல்லாம் கிறிஸ்தவனை பயனுள்ளவனாகவும் கனி கொடுப்பவனாகவும் மாற்றுகிறது.*

*கள்ளப்போதகர்கள் தங்களுக்கு அறிவு (ஞானம்) இருக்கிறபடியால் அவர்கள் பேசுவதற்கு உரிமை பெற்றவர்கள் என்பதை பேதுருவால் ஏற்றுக்கொள்ள இயலவில்லை. அவர்கள் சொல்லிக் கொள்ளும் ஞானம், உண்மையில் "வீணானதும்" "கனியற்றதுமாகும்." 1:5-7ல் அப்போஸ்தலன் வரிசைப்படுத்தின நற்குணங்கள் ஏவப்பட்டு சொல்லப்பட்டதும், தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதுமாகும், அது அவருடைய ஜனங்களை பயனுள்ளவர்களும் கனியுள்ளவர்களுமாயிருக்கச் செய்து,* ***நம்முடைய***

**கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவிலே வளரச் செய்கிறது.** *1:2, 3ல் அப்போஸ்தலன் பயன்படுத்தின அதே வார்த்தைக்கு இப்போது திரும்பி அறிகிற "அறிவு" (epignōsis) எனும் வார்த்தையைப் பயன்படுத்துகிறார்.* NASB *"மெய்யான அறிவிலே" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, ஆகிலும் கிரேக்க மொழியில் இந்த வசனத்தில் "மெய்யான" எனும் வார்த்தை தனிப்பட்ட ஒரு வார்த்தையாகக் குறிப்பிடப்படவில்லை. "மெய்யான அறிவு" எனும் வார்த்தையின் கருத்து கள்ளப் போதகர்களின் சுய சேவைக்குப் பயன்படுத்தப்படும் அறிவுக்கு முரணாக "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து" தான். அது மற்றவர்கள் மீது அதிகாரக் கட்டுப்பாடுகளை பெற்றிருப்பது மூலமாக அல்ல. அல்லது சுய புகழ்ச்சிக்கான அடித்தளமுமல்ல. "மெய்யான அறிவு" ஒழுக்க ரீதியான கனியைக் கொடுக்கிறது, இங்கே "பரிசுத்தம்" எனும் வார்த்தை பயன்படுத்தப்படாத நிலையில், 1 பேதுரு 1:15, 15ல் சொல்லப்பட்டுள்ள அதே நடக்கைகளை பேதுரு வலியுறுத்துவதாகக் காணுகிறது. 1:3ல் சொல்லப்பட்டுள்ள அறிவின் பொருள் தேவனுடைய மகிமை. இந்த வசனத்தில் காணும் அறிவின் பொருள் பரிசுத்தம்.*

**வசனம் 9.** *கிறிஸ்தவ நற்குணங்கள், நேர்மறையாக, அவர்களை பயனுள்ளவர்களாயும் கனி கொடுப்பவர்களாயும் மாற்றும் எதிர்மறையில்,* **இவைகள் இல்லாதவனெவனோ அவன் கண் சொருகிப்போன குருடனாயிருக்கிறான்,** *என்று பேதுரு சொன்னார். வீணரும் கனியற்றவர்களுமாயிருப்பது "இந்தத் தகுதிகளை" அவன் கொண்டிருக்கிறதில்லை என்று சாட்சியமாகிறது. ஒருவன் தனது வாழ்க்கையில், கிறிஸ்தவ நற்குணங்கள் இல்லாமல் இருக்கும் போது, அவன் கிறிஸ்தவ செய்தியைக் கேட்காமலும், புரிந்து கொள்ளாமலும், உள்ளீர்த்துக் கொள்ளாமலும் இருக்கிறான் என்பதை விளங்கப் பண்ணுகிறான். அவன் தான் காண்பதாகச் சொல்லிக் கொண்டாலும் அப்போஸ்தலன் சொல்லுகிறபடி அவன் "குருடனாயிருக்கிறான்." குருட்டுத்தன்மை என்பது கண்டு, உணரக் கூடாத தன்மைக்கு சொல்லப்படும் ஒரு பொதுவான உருவகச் சொல் (காண்க 2 கொரிந்தியர் 4:4).*

*இந்தச் சொற்றொடரில் காணும் வார்த்தைகளின் தொகுப்பு புதுமையானது. "கண்சொருகிப்போன குருடனாயிருப்பான்" என்பது சிறப்பான முழுமை பெற்றச் சொற்றொடர். அது முரண்பட்டது என்பது மிக மோசமானது. ஒரு "கண் சொருகிப்" போன நபர் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு பார்க்கக்கூடும். ஒருவன் "கண்சொருகிப் போனவனாகவும்" "குருடனாகவும்" ஒரே வேளையில் இருந்து விட முடியாது. மொழிபெயர்க்கப்பட்டுள்ள "கண் சொருகிப் போதல்" எனும் (muōpazō) வார்த்தை மிக அபூர்வமானது. இவ்வார்த்தை புதிய ஏற்பாட்டில் இங்கு மட்டுமே காணப்படுகிறது. வார்த்தையின் சொல்லிணக்கத்தின் "விழித்தல்" (கண் சிமிட்டுதல்) அல்லது "கண் மூடுதல்" என்று பொருள். இதன் கருத்து ஒருவன் வேண்டுமென்றே தனது கண்களை சத்தியத்தைப் பார்க்காதபடி மூடிக்கொள்ளுதலையும் கிறிஸ்தவ போதனைகளை புறக்கணிப்பதையும் குறிக்கிறது. இந்த விளக்கம் கவர்ச்சிகரமானதாக இருக்கிற நிலையில், சொல்லிணக்கம் என்பது ஒரு நிச்சயமற்ற வகையில் ஒரு வார்த்தைக்கு விளக்கமளிப்பதாகும். பேதுரு வேண்டுமென்றே கண்களை மூடிக் கொள்வோரைக் குறிப்பிடுவாரானால், அவர் பயன்படுத்தும் வார்த்தை*

சமகால பயன்பாட்டில் அறியப்படாதது. அநேகமாக அப்போஸ்தலன் குருட்டுத் தன்மையின் இயல்பை குறிப்பிடுவதற்காக சொல்லப்பட்டதாக இருக்கலாம். இதன் பொருள் "அப்படிப்பட்ட நபர் கண் சொருகிப்போய் குருட்டுத் தன்மையை அடைகிறவராகிறார்." இப்படிப்பட்ட விளக்கத்தால் NIV மொழிபெயர்ப்பு வார்த்தைகளை மாறிய வரிசையில் கொடுத்துள்ளது போலும்.

"கண் சொருகிப் போனவர்களைக்" குறித்து பேதுரு சொல்லுவது என்ன? உருவகம் எப்படிப்பட்ட காட்சியைக் கொடுக்கிறது? "கண் சொருகிப்போன" மனிதன் தனக்கு மிக அருகாமையில் இருப்பதை மட்டுமே காணுகிறான். அவன் உடனடியாகத் தனக்குத் தோன்றும் விளைவுகளைக் காணுகிறான். அவன் அந்த நேரத்திற்கான உள்ளக் கிளர்ச்சி, ஏற்புடமை, அல்லது சுய திருப்திக்குரியவைகளை மட்டுமே காணுகிறான். கிறிஸ்தவ நடக்கைக்கான ஆழமான சிந்தனை அவனிடத்தில் இல்லை, கிறிஸ்தவ உபதேசத்தின் பயன்பாடு குறித்த புரிந்துகொள்ளுதலுமில்லை, உபதேசம் என்பது அவனைப் பொறுத்தமட்டில் ஒரு தொல்லைமிகு திசை மாறுதல்தான். அவன் எதையும் சிந்திக்க விரும்புதில்லை; அவன் தேவனிடத்திற்கு தனது வழியை உணரவிரும்புகிறான். மனதை உடன்படுத்துவதற்குப் பதில் உணர்வுப் பூர்வமான உணர்ச்சிகள் ஆக்கிரமித்துக் கொண்டுள்ளது. தேவன் சொல்லியிருப்பவைகளைக் காட்டிலும் ஒரு விஷயத்தைக் குறித்து தனது உணர்வுகளுக்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கிறான். தேவன் என்னசொல்லியிருக்கிறார் என்று அறிந்து கொள்ளும் அக்கறையும் இராது, அறிந்து கொள்ளவும் மாட்டான். துரதிஷ்டவசமாக, கண்சொருகிப் போகிற தன்மை என்ற விளக்கம் கிறிஸ்தவம் எனும் பெயரில் மிக அதிகமாக சமகால மேற்கத்திய கலாச்சாரத்துக் கேற்ப இடம் பெறுவதைக் குறிக்க சரியானதாகவே இருக்கிறது.

கிறிஸ்தவ நற்குணங்களை கைக்கொள்ளுதலில் தவறுதல் மட்டும் இந்த "கண் சொருகிப்போதல்" இல்லை, அது ஒரு நன்றியறிதலற்ற தன்மைக்கும் ஒரு குறிப்பு உணர்வு. அப்படிப்பட்டவர்கள் **தாங்கள் முன் செய்த பாவங்களிலிருந்து தாங்கள் சுத்திகரிக்கப்பட்டதை மறந்து போகிறார்கள்.** பரிசுத்தமான வாழ்வு என்பது ஒரு அளவுக்கு நினைவுகூருதல் மற்றும் நன்றியுணர்வின் விளைவாக இருக்கிறது. தேவன் (இஸ்ரவேலர்) எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாகி வந்ததை நினைவுகூரும்படி, அவர்கள் ஓய்வுநாளை ஆசரிக்க வேண்டியதிருந்தது (உபாகமம் 5:15). உதவியற்றவர்களுக்கு இரக்கங்காட்டச் சொன்னதோடு ஊறுபட்டவர்களை காக்கவும் கட்டளையிட்டு, மோசே, "நீ எகிப்திலே அடிமையாயிருந்ததையும், உன் தேவனாகிய கர்த்தர் உன்னை மீட்டுக்கொண்டதையும் நினைவுகூரக் கடவாய்" என்று எழுதினார் (உபாகமம் 15:15). தேவ பக்தியுள்ளவன் என்று ஒருவர் சொல்லியும், கிறிஸ்தவ நல்லொழுக்கங்கள் அவனிடத்தில் குறைவுள்ளவனாயிருந்தால் அவன், தேவன் அவனைச் சுத்திகரித்ததை "மறந்து" தெய்வீக சுபாவத்தில் பங்கு பெறக் கூடாமல் போவான் (1:4). அவனுடைய தொடர் பாவங்கள் அவன் தன்னை பரிசுத்தத்திற்கென்று அழைத்த கர்த்தரை அவன் மறந்தவனாகிறான்.

## *நித்திய ராஜ்யத்திற்குள் பிரவேசித்தல் (1:10, 11)*

***[10]ஆகையால், சகோதரரே உங்கள் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள்; இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறிவிழுவதில்லை. [11]இவ்விதமாய், நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும்.***

*அழைக்கப்பட்டு பரிசுத்தமாக்கப்பட்டிருந்த போதிலும், கிறிஸ்தவர்கள் தங்கள் தெரிந்து கொள்ளுதலை இழந்துபோக வாய்ப்பு உண்டு. பேதுருவின் வாசகர்கள் கிறிஸ்தவப் பயணத்தைத் தொடங்கியிருந்தனர், ஆனால் கள்ளப் போதகர்கள் அவர்களுடைய வழிகளில் சில கடுமையான தடைகளை போட்டனர். அவர்களோ அமர்ந்து தேவனுடைய வழிகளை விவாதிக்கிற ஒரு நல்ல கூட்டமக்களாய் கிறிஸ்தவத்தைக் குறைத்துப் போடும்படி சோதிக்கப்பட்டனர். தேவன் அதிகமதிகமாய் எதிர்பார்க்கிறார். விசுவாசத்தை அறிக்கையிட ஏதுவான வாழ்வின் மறுமலர்ச்சி அடிக்கடி தேவை. தேவன் அழைத்திருக்கிறார்; கிறிஸ்தவன் அந்த அழைப்புக்கு பதில் அளிக்க வேண்டும். ஜாக்கிரதையாயிருக்க வேண்டியதே தற்காலத்திற்கான காரியம்.*

***வசனம் 10.** சிக்கலான சூழ்நிலைகளில் தனது பேச்சுக்களிலும் நிருபங்களிலும், பேதுரு சகோதரரே எனும் வார்த்தையை நுழைப்பதை பழக்கப்படுத்தியிருந்தார் (நடபடிகள் 2:29; 3:17; 15:7) அல்லது அதற்கு ஒப்பான வார்த்தையாகிய “பிரியமானவர்களே” எனும் பதத்தை பயன்படுத்தினார் (1 பேதுரு 2:11; 4:12; 2 பேதுரு 3:1, 8, 14, 17). சகோதரரே எனும் வார்த்தை அப்போஸ்தலன் தனது இருதயத்திலும் மனதிலும் தனது வாசகர்களைக் குறித்து கொண்டிருந்த நினைப்பூட்டுதலாகும். அவருடைய வேண்டுகோளில் மூடி மறைக்கப்பட்ட உள்நோக்கமோ, இரகசியமான நிகழ்வுகளோ இருக்க வில்லை. தேவன் அவர்களை அழைத்திருந்தார், என்று அப்போஸ்தலன் சொன்னார். தேவன் தமது பெரிதான வாக்குத்தத்தங்களை அவர்களுக்குக் கொடுத்திருந்தார். அவர்களை தெய்வீக சுபாவத்திற்கு பங்குள்ளவர்களாக்கினார், ஆனால் அவர்கள் அவருடைய ஆசீர்வாதங்களின் கதகதப்பில் சுகம் காண இலேசாக எடுத்துக் கொள்ளக் கூடாதிருந்தார்கள்.*

*சத்துரு மிகவும் வல்லமையுள்ளவன். அழைக்கப்படுதலும் தெரிந்து கொள்ளப்படுதலும் இலேசாக எடுத்துக் கொள்ளப்படக் கூடாதிருந்தது. ஆதாயமாக்கப்பட்ட இரட்சிப்பே நஷ்டமான இரட்சிப்பாகிவிடக் கூடும்.* ***ஆகையால், ஜாக்கிரதையாயிருங்கள்*** *என்று அப்போஸ்தலன் சொன்னார். வசனங்கள் 5 லிருந்து 9 வரை ஜாக்கிரதையாயிருக்கும்படி கேட்டுக் கொள்ளும் காரியங்களை அடைப்புக் குறிக்குள்ளாக்குகிறது.*

*தேவனுடைய மகத்துவத்தை மனிதன் தன்னிச்சையாய் தெரிவு செய்து கொள்ளுதலில் அடுக்கடுக்கான மென்மையுள்ள வார்த்தைகளால் குறிப்பிடப்படும் வார்த்தைகள் இதுதவிர புதிய ஏற்பாட்டில் வேறு எங்குமில்லை. இழந்து போனவர்கள் தேவனுடைய* ***அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும்*** *கிறிஸ்துவுக்குள் வந்து ஜீவனைக் காணுகின்றனர். கேள்வி என்னவெனில் தேவன் எப்படி தமது “அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும்” ஜனங்கள்*

*தமது ராஜ்யத்திற்குட்படும் பிரவேசத்திற்காகத் தெரிந்து கொள்கிறார் என்பதுதான். தேவனுடைய தெரிவு அறிவுக்கு அப்பாற்பட்டதா, தெய்வீக ஆளுகையா, அநாதியாய் கடந்த கால நித்தியத்தில் மகத்துவமான தெரிந்து கொள்ளுதலா, அல்லது தேவன் சுவிசேஷத்தின் மூலம் நம்மை அழைத்துத் தெரிந்து கொண்டாரா? பின்னதாகச் சொல்லப் பட்ட கருத்து உண்மையானால், கிறிஸ்துவின் செய்தியைக் கேள்விப்படுகிற ஒவ்வொரு மனிதனும் தெரிவு செய்து கொள்ளும் உரிமையை உடையவனாயிருக்கிறான், என்று பொருள். உண்மையில், செய்தியைக்கேட்டு அதற்கு கீழ்ப்படிகிற எவரும், அழைக்கப்பட்டவர்களும் தெரிந்து கொள்ளப்பட்டவர்களுமாவர். தேவனுடைய அழைப்பு என்பது தனது இரண்டு மகன்களையும் இரவு உணவை உண்ண அழைக்கும் ஒரு தாயின் அழைப்புக்கு ஒப்பானது. ஒருவன் ஏதோ ஒரு காரியத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு வராமலிருக்கிறான். மற்றொருவன் ஓட்டமாய்ப் போய் உண்ண அமருகிறான். அவள் ஒருவகையில் அவர்கள் இருவரையும்தான் அழைத்தாள், ஆனால் போய் உணவு உண்ண அமர்ந்தவனே முறையாக அழைக்கப்பட்டவனாவான்.*

*தெசலோனிக்கேயாவிலிருந்த கிறிஸ்தவர்கள், சுவிசேஷம் பிரசங்கிக்கப் பட்டதன் மூலம் அழைக்கப்பட்டார்கள் என்று பவுல் சொன்னார் (2 தெசலோனிக்கேயர் 2:14). தேவனே முன்பு இதைத் தெரிவு செய்தார். தமது செய்தியின் மூலம் எல்லா ஜனத்தாரிடத்திலும் அணுகினார், அதைக் கேட்கிறவன் ஒன்றேல் கீழ்ப்படிகிறான் அல்லது மறுதலிக்கிறான் (ரோமர் 2:8; 2 தெசலோனிக்கேயர் 1:8; 1 பேதுரு 4:17), இந்த வசனத்தில் பேதுரு இன்னும் சற்று விளாவாரியாக இந்தக் கருத்தை விவரிக்கிறார். விசுவாசிக்கிறவன் சுயமனச் சாட்சியில் "விசுவாசத்துக்குக் கீழ்ப்படிகிற" முடிவை எடுப்பதோடு மட்டுமல்ல, (ரோமர் 1:5; 16:26), ஆனால் அவன் மேலும் தனது "அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும்" "உறுதியாக்கும்படி"* ***ஜாக்கிரதையாயிருக்க வேண்டியவனாயுமிருக்கிறான்*** *என்று சொன்னார். சுவிசேஷத்தின் முக்கியத்துவத்திற்கு மனிதனின் பொறுப்பேற்கும் காரியம் தேவனால் அழைக்கப்பட்டதை முடிவுசெய்து வருவது மட்டுமல்ல, அழைக்கப்பட்ட நிலையிலேயே தரித்திருக்கவும் வேண்டும்.*

NASB *மொழிபெயர்ப்பில் "அவருடைய" என்ற வார்த்தையை சேர்த்தது மாத்திரமல்ல, அது உயர்ந்த எழுத்துக்களால் குறிப்பிடப்பட்டு, தேவனுடைய அழைப்பை முக்கியப்படுத்துகிறது. உண்மையில், இதிலே சம்பந்தப்பட்டுள்ள ஒரே பிரதி பெயர்ச்சொல் முன்னிலை பன்மையில் "உங்களுக்கு" என்று சொல்லப்படுகிறது, கூடுதலாக வினைச்சொல்லாகிய (உறுதி) "யாக்கும்படி" என்பது கிரேக்க இடைச் சொல்லான "ஒருவன் தனக்குத்தானே உறுதிப்படுத்திக் கொள்ளுதலைக்" குறிக்கிறது. இந்த சம்பவத்தில் கால்வினின் ஒருதலைப் பட்சமான கருத்து* NASB *மொழிபெயர்ப்பு மூலம் தெளிவாகக் காணுகிறது. இதற்கு முந்தின வசனத்தில் (1:9) ஒவ்வொரு தனிப்பட்ட விசுவாசியும் பேசப்பட்ட நபர்கள். பேதுரு விசுவாசிகளுக்குச் சொல்லி அவர்கள் கிறிஸ்துவினிடத்தில் வந்த போது அநுபவித்து "தெரிந்து கொள்ளுதலையும் அழைப்பையும்" உறுதியாக்கும்படி கூறினார். இந்த வார்த்தைகள் சிறப்பாக மொழிபெயர்க்கப் பட்டுள்ளன, "உங்கள் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள்."*

*தமது வார்த்தைகளை அடிக்கோடிட்டுக் கொள்ள ஏதுவாக பேதுரு கூடுதலாக,* ***"இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறிவிழுவதில்லை"*** *என்று சொன்னார். இடறிவிழுவது என்பது ஒரு உண்மையான சாத்தியக்கூறு. சில நேரங்களில் ஜனங்கள் சத்தியத்திலிருந்து "வழுவிப் போகிறார்கள்" (2 தீமோத்தேயு 2:17, 18). அதினால் தான் பேதுரு ஜாக்கிரதையாக இருக்கும்படி வேண்டினார். எவ்வளவு காலம் பேதுருவின் வாசகர்கள் தேவனுடைய அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் அநுபவிக்கக் கூடும்? பேதுருவே பதில் அளிக்கிறார், "இவைகளைச் செய்கிற வரைக்கும்." இதன் குறிப்பு என்னவெனில் "இவைகளை" செய்யாமற் போனால் அவர்கள் தங்களுடைய அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் இழக்க வேண்டியதாகும். "இவைகளை" என்பது கிறிஸ்தவ நல்லொழுக்கங்களாக பேதுரு இதற்கு முந்தைய வசனத்தில் வரிசைப்படுத்தியவை, கிறிஸ்தவனாக இருப்பது என்பது ஏதோ அறிவு சார்ந்த ஒரு விளையாட்டல்ல. அது சொல்லப்படுவதற்கு மேலாக சரியானதைச் செய்வதாகும். அது நடக்கையில் கிறிஸ்துவையும் அவருடைய உபதேசத்தையும் மாற்றாத வகையில் செயல்படும் அமைப்பாகும்.*

***வசனம் 11.*** *ஒரு விசுவாசி, "இவைகளைச்" செய்யும்போது, அவன் ஒருபோதும் "இடறிவிழுவதில்லை."* ***இவ்விதமாய் … நித்திய ராஜ்யத்திற்குட்படும் பிரவேசம் அளிக்கப்படுகிறது.*** *சபைக்குப் பயன்படுத்தப்பட்டுள்ள அனைத்து உருவகமொழியிலும் (உதாரணமாக, "சரீரம்," "குடும்பம்," "வீட்டார்," "ஆலயம்"), "ராஜ்யம் என்னும் உருவகச் சொல் மிகவும் பொதுவானது. சமாதானம் கோலோச்சும் ஒரு ராஜ்யத்தைக் குறித்து தீர்க்கதரிசிகள் முன்னுரைத்தார்கள்" (காண்க ஏசாயா 9:6, 7). யோவான் ஸ்நானகன் வந்த போது, "ராஜ்யம் சமீபித்திருக்கிறது" என்று பிரசங்கம் பண்ணினார் (மத்தேயு 3:2). பவுலின் போதனைப்படி, தேவன் நம்மை "தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்துக்கு உட்படுத்தினார்" (கொலொசெயர் 1:13). புதிய ஏற்பாட்டில் இங்கு மட்டுமே சபை "நித்திய ராஜ்யம்" என்றழைக்கப்படுகிறது.*[2] *இந்தக் குணப்பெயர்ச்சொல் மற்ற காரியங்களான நித்திய மகிமை (2 கொரிந்தியர் 4:17) மற்றும் நித்திய இரட்சிப்புக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது (எபிரெயர் 5:9). "நித்திய ராஜ்யம்" உயிர்த்தெழுதலுக்கு பின் வந்த முதல் பெந்தெகோஸ்தே நாளில் ஸ்தாபிதம் பெற்றது. முதன் முறையாக ஜனங்கள் நடபடிகள் 2ல் கேட்டபோது. "நாங்கள் என்ன செய்ய வேண்டும்?" என்றார்கள். அதற்குப் பதிலாக, "நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்பிற்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெறுங்கள்" என்று சொல்லப்பட்டது (நடபடிகள் 2:37, 38). இரட்சிக்கப்பட்டவர்களின் கூட்ட அமைப்பு, மற்றும் தொடர்ந்து அமைப்பு பெறும் கூட்ட ஜனங்களே, "நித்திய ராஜ்யமாயிருக்கிறார்கள்."* ***அது நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் ராஜ்யம்.***

*கிறிஸ்தவ நல்லொழுக்கங்களை கைக் கொள்ளாதவர்கள் இடறி விழுகிறார்கள். இதனால் அவர்கள் தங்கள் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் இழந்து போகிறார்கள். வசனங்கள் 10, 11ல் ஒருவரும் இடறி விழக் கூடாது என்பதை தெளிவுபடுத்துகிறது. "நித்தியராஜ்யத்துக்குட்படும்" பிரவேசத்தை தேவன் அளித்ததுடன் நிறுத்திக்கொள்ள வில்லை, மாறாக* ***பரிபூரணமாய் அளிக்கிறார்.*** *துவங்கி வைப்பது தேவனைச் சேர்ந்தது.*

ராஜ்யம் நித்தியமானது, ஏனெனில் கர்த்தர் மறுபடியும் வரும்போது, இந்த சந்ததியில் உள்ள சபை மகிமையுள்ள ராஜ்யமாக ஏற்றுக்கொள்ளப்படும். புதிய ஏற்பாடு முழுவதிலும் “ஏற்கனவே, ஆனால் இன்னும் இல்லை” என்று கிறிஸ்துவுக்குள்ளான ஜீவிய அமைப்பு பேசப்படுகிறது. ஒரு பக்கம் பார்த்தால், இந்த நிகழ்காலத்தில் விசுவாசிகள் தேவனுடைய ராஜ்யத்தின் ஆசீர்வாதங்களை அநுபவிக்கிறார்கள், அவர்கள் தேவனிடத்தில் ஒரு நித்தியமான உறவுமுறையைத் துவங்கியுள்ளனர். மறுபடியும் பார்த்தால், இன்னும் எதிர்காலத்தில் உணரத்தக்க காலவரையற்ற இளைப்பாறுதலும் சமாதானமும் முன்னுரைக்கப்பட்டுள்ளது. இந்த வாழ்க்கையிலும் இனிவரும் வாழ்க்கையிலும், பிரதிபலனின் ஐசுவரியம் விசுவாசமுள்ள ஜீவியத்தை ஜீவித்ததற்காக நேரடி சரிவிகித அளவாகக் கொடுக்கப்படுகிறது.

## *நினைப்பூட்டும் வகையில் (1:12-15)*

***[12]இதனிமித்தம், இவைகளை நீங்கள் அறிந்தும், நீங்கள் இப்பொழுது அறிந்திருக்கிற சத்தியத்தில் உறுதிப்பட்டிருந்தும், உங்களுக்கு இவைகளை எப்பொழுதும் நினைப்பூட்ட நான் அசதியாயிரேன். [13]நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து எனக்கு அறிவித்தபடி நான் என் கூடாரத்தை விட்டுப் போவது சீக்கிரத்தில் நேரிடுமென்று அறிந்து, [14]இந்தக் கூடாரத்தில் நான் இருக்குமளவும் உங்களை நினைப்பூட்டி எழுப்பிவிடுவது நியாயமென்று எண்ணுகிறேன். [15]மேலும், நான் சென்று போன பின்பு இவைகளை நீங்கள் எப்பொழுதும் நினைத்துக் கொள்ள ஏதுவுண்டாயிருக்கும்படி பிரயத்தனம் பண்ணுவேன்.***

*நிருபத்தின் இந்த நிலைப் பகுதியில், பேதுரு எழுதும் நடையில் எதிர்பாராத மாற்றம் காணப்படுகிறது. அவர் தன்னை ஒரு ஆர்வமிக்க ஆசிரியன் போல் எழுதியிருக்கிறார், ஒரு உடன் யாத்ரீகனாக தேவனுடைய மகிமையையும் மேன்மையையும் அவர்களோடு பகிர்ந்து கொண்டார். இந்தத் திராணியின் அடிப்படையில் அவர்களை ஜாக்கிரதையாக இருக்கும்படி எச்சரிக்கிறார். ஏற்கனவே அவர் மிகச் சிறப்பு வாய்ந்த வாக்குத்தத்தங்கள் அவர்களில் நிறைவேற்றப்பட்டிருந்ததை நினைப்பூட்டியிருந்தார். அவர்கள் தேவனுடைய வாக்குத்தத்தங்களை அநுபவித்துக்கொண்டிருந்த நிலையில் குறிப்பிடப்பட்ட நல்லொழுக்கங்கள் மூலம் இன்னும் மிகப் பெரிய ஆசீர்வாதங்களை அவர்கள் உணரும்படி பேதுரு விரும்பினார்.*

*அப்போஸ்தலன் ஒரு தனிப்பட்ட ரீதியில் மாற்றம் பெற்றவராக, அஸ்திபாரமிட்டார். கர்த்தரிடத்தில் நெருக்கமான நட்பை வளர்த்தவராக ஒரு கதைக்குள்ளானதுபோல் பேசுகிறார். தான் இயேசுவோடிருக்கையில் பெற்ற அநுபவத்தை அவர்களுடன் சம்பாஷிக்கிறார். நிகழ்ச்சிகள் தற்செயலானதல்ல. அவருடைய அதிகாரத்திற்கு வலிவூட்டுவைகளான நிகழ்ச்சிகளையே குறிப்பிட்டார். மாமிச ரீதியில், கர்த்தரை முதல் கட்டமாக நேருக்கு நேர் அறிந்திருந்த படியால், சபைக்குள் நுழைந்திருந்த கள்ளப் போதகர்களை சரிப்படுத்த அப்போஸ்தலன் உரிமையைப் பெற்றிருந்தார்.*

***வசனம் 12.*** *லூக்கா அத்தேனே பட்டணத்தில் இருந்த தத்துவ ஞானிகள் எப்படி, “நவமான காரியங்களைச் சொல்லுகிறதிலும் கேட்கிறதிலுமேயொழிய வேறொன்றிலும் செலவிடுகிறதில்லை.” என்பதை எழுதினார் (நடபடிகள் 17:21). அதற்கு மாறாக,*

*பேதுரு தனது வாசகர்களிடம் தான் புதிதான காரியங்கள் எதையும் தான் அவர்களுக்குச் சொல்லவில்லை என்பதை உறுதிப்படுத்தினார். அதற்குப் பதிலாக. அவர்கள் ஏற்கனவே விசுவாசித்திருக்கிற காரியங்களின் துவக்க நிகழ்வுகளுக்கு அவர்களை அழைத்துச் செல்கிறார்.* ***உங்களுக்கு இவைகளை எப்பொழுதும் நினைப்பூட்ட நான் அசதியாயிரேன் என்று எழுதினார்.*** *இந்த கருத்துக்கு மீண்டும் 3:1ல் திரும்புகிறார்: "... உங்கள் உண்மையான மனதை நினைப்பூட்டி எழுப்புகிறேன்."*

Fred B. Craddock *தனது கூர்மையான ஆய்வின் மூலம் "நினைப்பூட்டி எழுப்பும்படி" மிக அதிகமான பிரசங்கங்கள் கிறிஸ்தவத்தில் செய்யப்படுகின்றன, என்றார்.*[3] *பிரசங்கியார் தனது செய்தியில், சமுதாய தொழுகை நேரத்தில், மோசேயின் எகிப்திய குழந்தைப் பிராயக் கதைகள், இஸ்ரவேலரின் வனாந்திர நிகழ்வுகள், தாவீது மற்றும் கோலியாத், தீர்க்கதரிசிகள், பாபிலோனிய சிறையிருப்பு, யோவான் ஸ்நானகன், இயேசுவின் உவமைகள், உயிர்த்தெழுந்த ஆண்டவரைக் குறித்த மனவெழுச்சி வரலாறு, கிறிஸ்தவத்தின் பரவுதலுக்கடுத்த காரியங்கள் ஆகியவற்றைப் பிரசங்கிக்கிறார். கேள்வியுறும் பெரும்பாலான ஜனங்களுக்கு இவைகள் எதுவும் புதிதல்ல, ஒவ்வொருவரும் கேட்கின்றனர், கவனிக்கின்றனர், அவர் தம் இருதயத்தில் விசுவாசம் மறுவலிமை அளிக்கப்படுகின்றது. தன்னை அறியாமலேயே அவர் தன் பிரதிபலிப்பை வெளிக்காட்டி, "ஆம், இவைகள் என் ஜனத்தாரின் வரலாற்றுச் சம்பவங்கள். நாம் யார் என்பதையும் நாம் விசுவாசிப்பது என்ன என்பதையும் இவைகள் நமக்குச் சொல்லுகின்றனர். இவைகள் நம்முடைய நம்பிக்கையை விவரித்து நமக்குள் நன்மையானவைகளை ஏவுகின்றன," என்கின்றார்.*

*இந்த வசனத்தைத் துவக்கும் அவலமான கிரேக்கமொழியை இந்த மொழிபெயர்ப்புகள் சிறிதளவே சுட்டிக்காட்டுகின்றன. பேதுரு எதிர்காலத்தில் பேசுகிறார், ஆகிலும், "நான் எப்பொழுதும் ஆயத்தமாயிருக்கப்போகிறேன்" என்று சொல்லுகிறது என்றோ, அல்லது "நான் ஏறத்தாழ எப்பொழுதும் ஆயத்தமாயிருக்கிறேன்" என சொல்லுகிறது என்றோ அப்போஸ்தலன் சொல்வதாக பொருள் கொள்வது மிகவும் கடினமானது. இதில் கிரேக்கம் கொச்சைத் தனமாக இருப்பதால், அப்போஸ்தன் எதை அர்த்தப்படுத்தினார் என்பதை அறிவது கடினமாக இருக்கிறது.*[4] NASB *மொழிபெயர்ப்பில் இந்த வசனத்தின் (முன்பின்) பகுதியை கணக்கில் கொள்கிறது. அதில் "நான் எப்பொழுதும் இவைகளை நினைப்பூட்ட முயற்சிப்பேன்" என்று பொருள்படும்படி மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. பேதுருவின் முயற்சி இந்த நிருபத்தையும் உள்ளடக்கியே பேசுகிறது, ஆகிலும் வசனம் 15 லிருந்து அவர் எடுக்க விருக்கும் வேறே பிரயாசங்களையும் தன் மனதில் வைத்து சொல்லுகிறார் என்பதாக காணப்படுகிறது (காண்க 1:15க்கான விளக்கவுரை).*

*தான் நினைப்பூட்டுவதில் அப்போஸ்தலன் எச்சரிக்கையை கையாளுகிறார். அவர் தன் வாசகர்களை தனது பங்களிப்புக்குள் ஏற்று அவர்களை நேசமுடன் அரவணைக்கிறார். நினைப்பூட்டப்படுதல்கள் விசுவாச விஷயத்திலோ தனது வாசகர்களுக்கான அறிவு விஷயத்திலோ குற்றஞ் சாட்டப்படவில்லை. பேதுரு குறிப்பிடுகையில் "இவைகளை நீங்கள் அறிந்தும், நீங்கள் இப்பொழுது அறிந்திருக்கிற சத்தியத்தில் உறுதிப்பட்டிருந்தும்" என்று சொல்லுவதால்*

நினைப்பூட்டுதலின் முக்கியத்துவம் குறிப்பிடப்படுகிறது. கள்ளப் போதகர்கள் சில கிறிஸ்தவ சமுதாயத்திற்குள் நுழைவு பாதைகளை ஏற்படுத்தி யிருந்தனர் என்பதில் சந்தேகமில்லை. அப்போஸ்தலன் தன் வாசகர்களை மிக மதிநுட்பமாக ஒரு பொதுவான காரியத்தில் பிடித்துக் கொண்டார். அவர்கள் அப்போஸ்தலர்களின் உபதேசங்களைக் கேட்டவர்கள், எனவே கள்ளப் போதகர்களையும் அவர்களின் வழிகளையும் அரவணைப்பதைக் காட்டிலும் சிறப்பானதை அவர்கள் அறிந்திருந்தார்கள். அவர்கள் "சத்தி யத்தில் உறுதிப்பட்டிருந்தனர்." "சத்தியத்தைப்" பேசுவதில் பேதுரு எந்த வித தயக்கமும் காட்டவில்லை. சகல "சத்தியத்தையும்" இன்றைய கலாச்சாரத்துக்கேற்ப தொடர்புபடுத்துகிற நிலையிலிருந்து வெகுதொலைவில் அவர் தள்ளியிருந்தார். அவருடைய வாசகர்கள் கிறிஸ்துவுக்குள் "சத்தியத்தை" அடைவதில் எவ்வித சந்தேகமும் கொண்டிருக்கவில்லை.

**வசனம்** *13.* பேதுரு தனது அப்போஸ்தலிக பொறுப்புணர் வையுடையவராயிருந்தார். அவர் அதைச் சரியென ஆலோசித்தார், அல்லது செய்ய வேண்டிய சரியான காரியம் என நினைத்தார், ஏனெனில் அவர் ஒரு இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலனாக விசுவாசிகள் ஏற்கனவே பெற்றிருந்த செய்திக்கு திரும்பவும் கொண்டுபோக விரும்பினார். செய்ய வேண்டிய சரியான காரியம் இதுவே ஏனெனில் இந்த பூமியில் வாசம் பண்ணுதல் தற்காலிகமானது என்று பேதுரு அறிந்திருந்தார். "இந்தக் கூடாரத்தில்" அதிக நாள் தான் ஒருவேளை தங்கி அவர்களுக்கு நினைப்பூட்டக் கூடாமல் போகலாம் என்று ஆலோசனையாகச் சொன்னார். 1 பேதுருவில் வாசகர்கள் "அந்நியர்களும் பரதேசிகளுமாயிருக்கிறார்கள்" என்று சொன்னார். இந்த நிருபத்தில் மாம்ச சரீரம் என்பதைக் "கூடாரம்" என்று சொல்லி, வாழ்வின் பொருள் ஒரு தொடர் பயணமாக இருக்கிறது. அது பழைய ஏற்பாட்டில் ஆழமான வேர்கொண்ட இறையியல் கருத்தாக ஒரு ஆழமான வேராகச் சொல்லப்படுகிறது. அதே வேளையில், அது பழங்கால கிரேக்க இலக்கிய ஆசிரியர்கள் மத்தியில் அது பொதுவான கலைக்குரிய முக்கியக்கருத்தாக இருந்தது.

எருசலேமாக இருந்தாலும் சரி, ரோமாபுரியாக இருந்தாலும் சரி, கிறிஸ்தவ சமுதாயத்திற்குத் தலைமைப் பொறுப்பு வகிப்பது ஒரு ஆபத்தான செயலாக இருந்தது. ஸ்தேவானும் (நடபடிகள் 7:58, 59) யாக்கோபும் (நடபடிகள் 12;1, 2) ஏற்கனவே தங்கள் மரணத்தைச் சந்தித்து விட்டனர். பேதுருவும் மரணத்துக்கு அருகில் இருந்தார் (நடபடிகள் 12:3, 4). "பூமியில் வாசம் பண்ணுதல்" எனும் சொற்றொடரின் பொருள் "கூடாரம்" (*skenoma*) என்பதிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது. இது மிகவும் வண்ணமிக்க உருவகச் சொல், ஆகிலும் இன்றைய கலாச்சாரத்துக்கு தொடர்பற்றதாய்க் காணுகிறது. ஏனெனில் பேதுருவுக்கு குடியிருப்புச் சரீரமோ தற்காலிகமானதாக இருந்தது, மரிக்க வேண்டிய நேரம் வரும்போது அதை உதைத்துத் தள்ளி பின்னுக்குத் தள்ளிவிட்டு புறப்பட்டுச் செல்ல முடியும்.

கிரேக்கச் சிந்தனையில், சரீரமென்பது ஆவி சிறைப்படுத்தப்படும் இடம் எனப்பட்டது. சரீரம் சாகும்போது, ஆவி விடுதலை பெறுகிறது. ஒருவருடைய சாராம்ஸம் அவருடைய ஆவியாக இருந்தது. திருமறைப் போதனைப்படி ஒரு தனிநபர் என்பது சரீரமும் ஆவியும் சேர்ந்த புரியாத தொகுப்பு. சரீரத்துக்குப்

புறம்பே ஒன்று இருப்பது என்பது யூதர்களால் ஒரு போதும் ஏற்றுக் கொள்ள முடியாதது. பவுல் வரவிருக்கிற உலகில் வாழ்க்கை என்று பேசினபோது, ஏதோ விளக்கப்படாத ஆவியாக நிலைத்திருப்பதாக அல்ல அது உயிர்த்தெழுந்த சரீரத்தின் வாழ்வு என்பதாகவே இருந்தது (காண்க 1 கொரிந்தியர் 15:42-58).

"பூமிக்குரிய கூடாரம்" என்ற பேதுருவின் வார்த்தைகள் ஒரு சரீர/ ஆவியுடைய இரட்டை உருவத்தை அவர் ஏற்றுக் கொண்டார் என்று காட்டுகிறதல்ல. மாறாக, அவர் தனது மாம்ச வாழ்க்கைக்கு நிச்சயமாக ஒரு முடிவு ஏற்படுவதை குரல் கொடுத்தார், அந்த நேரம் வரும்வரை, **அவர்களை நினைப்பூட்டி எழுப்பி விடுதலை** தனது கடமையென கருதினார். அவருடைய வாசகர்களுக்கு கிறிஸ்தவரைத் தெரியும்: கிறிஸ்தவர்களின் ஒழுக்க ரீதியான அறிக்கையின் பயன்பாட்டை அவர்கள் அறிவார்கள், பயமுறுத்தல்கள் வந்தபோது, அப்போஸ்தலன் பாரம்பரியத்தைப் பயன்படுத்தினார், பேதுரு பழைய கதை அவர்களை எழுப்பி விட்டு, புதிதாக்கப்பட்ட விசுவாசத்தையும் வைராக்கியத்தையும் ஏவுதலை ஏற்படுத்தும் என்று எதிர்பார்த்தார். பாரம்பரியம் சபையின் கடந்த காலத்தை நோக்கி தஞ்சம் புகுவதல்ல. அது சுறுசுறுப்பற்ற நிலையால் சபை மிரட்டப்படும் போது, அந்த மிரட்டல்கள் சரீரத்திற்குள்ளாகவே பிரிவினையை ஏற்படுத்தும்போது, அல்லது கள்ள உபதேசத்தால் விசுவாசத்தையும் ஒத்துப் போகச் செய்யும்போது அதன் அக்கினி ஜீவாலையை கிண்டி விடுகிற ஒரு ஏவுதல்.

பேதுருவின் முழு நிருபத்திலும் வாதாடுதல் சார்ந்த வசனப்பகுதியால் அறிவுரை வழங்கப்படுகிறது. முதலாவதாக, அவர் மிக உயர்வான ஒழுக்க ரீதியான வாழ்க்கையை தனது வாசகர்கள் வாழும்படி கேட்டுக் கொண்டார். மேலும் ஒழுக்கரீதியிலான கொள்கையோடும் வாழும்படி கூறினார். ஆரம்பத்திலிருந்து அவர்கள் பெற்றிருந்த உபதேசங்களை நினைப்பூட்டினார். அவர் தனது அப்போஸ்தலிக அதிகாரத்தை பயன்படுத்தினார். பிறகு, இரண்டாம் அதிகாரத்தின் ஆரம்பத்தில், அவர் நேரடியாக கள்ளப்போதகர்கள் மீது கவனம் செலுத்தினார். இருப்பினும், இங்கேயும்கூட அவருடைய சிந்தனை போதகர்களை நோக்கியே சென்று கொண்டிருந்தது.

***வசனம் 14.*** பேதுரு தனது மரணத்தைக் குறித்த நேரத்தைத் துல்லியமாக அறிந்திருக்கவில்லை, ஆனால் யோவான் 21:18, 19ல் கர்த்தருடனான தனது உரையாடலிலிருந்து, அப்போஸ்தலன் தனது மரணத்தை ஒரு சிநேகிதனாகக் கருதியே வாழ்ந்து கொண்டிருந்தார், இயேசு சொன்ன வார்த்தைகளை மறுபடியும் நினைவுபடுத்திக் கொள்வது அவரது ஜீவியத்தில் எந்த காலத்துக்கும் சரியானதாகவே இருந்தது.

2 பேதுரு புத்தகத்தின் ஆசிரியர் ஒரு கற்பனைப்பாத்திரம் என்போர் இந்த வசனத்தை புரிந்து கொள்வதில் பேதுரு தான் ஆசிரியர் என்பதை வெளிப்படையாகக் காட்டாமல் மெலிதான ஒரு திரை காணுவதாக வாதிடுகின்றனர், இப்படியொரு யூகத்தை ஏற்படுத்தி விட்டு, அடுத்த கட்ட யூகமாக உண்மையான பேதுரு புத்தக ஆசிரியர், பேதுரு ரோமாபுரியில் இருக்கும்போது, அவரது அந்திமகால வாழ்வின் போது, அவர் எழுதியது போன்ற தோற்றத்தைக் கொடுத்தார், என்கின்றனர். அப்போஸ்தலனாகிய பேதுரு இந்த நிருபத்தை எழுதியிருக்க முடியாது என்று நாம் யூகிக்கும்போது மட்டுமே இந்த புத்தகம் ரோமாபுரியிலிருந்து தோன்றியது என்று ஒரு

*மனசாட்சியுடனே கூட எழுதிய நபர் மீது நம்பிக்கை ஏற்பட கோரப்படுகிறது, நிருபத்தில் ரோமாபுரியிருந்து அது எழுதப்பட்டதற்கான குறிப்பு எதுவும் கொடுக்கப்படவில்லை.*

*யோவான் 21ல் காணும் உரையாடலில், பேதுரு கட்டப்பட்டவனாக காவலில் வைக்கப்படுவான் என்று சொன்னார், பின்னதாக வந்த யாரோ ஒரு சீஷன் தன்னை பேதுருவாக தோற்றமளிக்கப் செய்வது என்பது, பேதுரு சிறைவைக்கப்படுவது குறித்து தீர்க்க தரிசனமாகச் சொல்லியிருக்க வேண்டும் என்று எதிர் பார்க்கக் கூடும். அதுவும் அந்த உரையாடலில் ஒரு பகுதி. கூடுதலாக, இது ரோமக் காவலில் பேதுருவை வைத்தது தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றமாகக் காண இது ஒரு வசதியான சந்தர்ப்பமாகியிருக்கக் கூடும். மாறாக, 2 பேதுருவில் அதன் ஆசிரியர் காவலில் வைக்கப்பட்டதற்கான குறிப்பு எதுவுமில்லை. பின்னர் வந்த ஒரு சீஷன் தான் இந்த நிருபத்தை பேதுருவின் பெயரில் எழுதின ஆசிரியர் எனில் அவன் அரைமனதுடன் தான் யோவான் 21ல் சொல்லப்படுகிற உரையாடலைப் பயன்படுத்தி அப்போஸ்தலன் எழுதினதாகக் குறிப்பிடும் தனது வாதத்தை நிலை நிறுத்த முற்பட்டிருக்கலாம்.*

*யோவான் 21ல் இயேசு குறிப்பிட்ட வார்த்தைகள் நான் என் கூடாரத்தை விட்டுப்போவது சீக்கிரத்தில் நேரிடும் என்று அறிந்து என்ற வாக்கியத்தில் வாதிடும் நிச்சயத்தைப் பின்னணியாகக் கொண்டிருக்கிறது. "சீக்கிரத்தில்" எனும் பதம் குறித்து சுருக்கக் கருத்தில் மொழியாக்கம் குறித்த வழக்காடுதல் நடந்து கொண்டுதான் உள்ளது. சிறப்பான அர்த்தத்தை tachinos என்பதற்கு நாம் கொடுத்தாலும் கூட "சீக்கிரம்" அல்லது "திடமாக" என்பது நிச்சயமாக அப்போஸ்தலன் தான் வாழ்ந்த காலத்திலேயே மரணம் சீக்கிரத்தில் வருவதுபோன்ற உணர்வில் வாழ்ந்தார், அது இவர் ரோமாபுரிக்குப் போவதற்கு வெகு காலத்துக்கு முன்பாகவே இடம் பெற்றது, ஆகிலும், ஒரு நல்ல ஆதாரமாக "உடனே" (திடீரென) என்பது ஒரு சிறப்பான மொழிபெயர்ப்பாக இந்த வார்த்தை உள்ளது.[5] அப்படிப்பட்ட காரியத்தில், குறிப்பான நேரம் இந்த வசனத்தில் குறிப்பிடவில்லை.*

***வசனம் 15.*** *ஜாக்கிரதையாயிருக்கும்படி தனது வாசகர்களுக்கு குறிப்பிட்டபின் (1:5, 10), அப்போஸ்தலன் தனது சுய பிரயாசங்களிலும் ஜாக்கிரதையாக இருப்பது குறித்துப் பேசுகிறார். "நம்முடைய கர்த்தராகிய இயேசு" குறிப்பிட்ட தீர்க்கதரிசனம் பற்றி பேசின பேதுரு, தான் சென்று போன பின்பு அவர்களுக்குக் கிடைக்கக் கூடியதாக இருந்த இவைகளைக் குறித்த தனது விருப்பத்தைக் குறிப்பிட்டார். நான் சென்று போன பின்பு என்னும் சொற்றொடர் நிச்சயமாக அப்போஸ்தலனின் மரணத்தைக் குறிக்கிறது.[6] "இவைகளைக் குறித்து" என்ற வார்த்தைக் குறிப்பு முழுமையான தெளிவைக் கொடுப்பதில்லை. இந்த நிருபத்தில் அவர் பேசினவைகளைக் குறிப்பிடுவதாக இருக்கலாம். ஒருவேளை கள்ளப்போதகர்கள் சீஷர்களை வஞ்சிக்கத் தக்கதாக செயலாற்றுவதை கண்டித்து தனது எதிர்காலத்தில் பேதுரு எடுக்கும் முயற்சிகளைக் குறிப்பதாக இருக்கலாம். எப்படியிருப்பினும், நூற்றாண்டுகளினூடே விளக்கவுரையாளர்கள் அவருடைய வார்த்தைகளை புரிந்து கொண்டிருந்தனர்.*

*இப்பொழுதுதான் "கர்த்தராகிய இயேசு கிறிஸ்து" தனக்கு வரவிருந்த மரணத்தைக் குறித்து பேசினதாக அப்போஸ்தலன் குறிப்பிட்டார். "இவைகள்"*

*என்பது இயேசுவைக் குறித்த ஒரு பொதுவான குறிப்பாக இருக்கக் கூடும். ஒருவேளை பேதுரு இயேசுவைக் குறித்து எழுதுவதில் ஜாக்கிரதையாய் இருப்பதாக பேதுரு வாக்குறுதி கொடுத்திருக்கலாம். இயேசுவின் பூமிக்குரிய ஊழியத்தைக் குறித்து பேதுரு எழுத எண்ணியிருந்தாரா? திருமறையில் பேதுரு எழுதின சுவிசேஷம் என்று ஒரு புத்தகம் இல்லை, ஆகிலும் சுவிசேஷப் புத்தகங்களில் ஒன்று உருவானதற்கு பேதுரு ஒரு கருவியாக இருந்துள்ளார் என்று எண்ணுவதற்கான காரணமுண்டு.*

*சபையைக் குறித்த வரலாற்று ஆசிரியர் யூசிபியஸ், நான்காம் நூற்றாண்டின் முதல் பாதியில், தன் காலத்து கிறிஸ்தவ வட்டாரத்தில் தான் கண்ட காரியங்களை ஒரு பதிவேடாக வெளியிட்டார். அவர் கிறிஸ்தவர்களால் எழுதப்பட்ட அநேக பதிவேடுகளை பெறும் வாய்ப்பைப் பெற்றிருந்தார், அப்படி எழுதின கிறிஸ்தவர்கள் அவருக்கு முன்பு வாழ்ந்தவர்கள், அந்தப் பதிவேடுகள் அழிந்து நெடுங்காலமாயிற்று. யூசிபியஸிடம் இருந்த பதிவேடுகளில், சபையின் மூப்பர்களில் ஒருவர் மேற்கு ஆசியா முனையில் பாபியா எனும் பெயரில் இருந்துள்ளார். பேதுரு மரித்த குறுகிய நாட்களுக்குள்ளாகவே பாபியா பிறந்தான் என்பதற்கான காரணங்கள் உண்டு என்றார். யூசிபியாஸின் எழுத்துப்படி, பாபியா எழுதினதாவது,*

> *மாற்கு பேதுருவின் மொழிபெயர்ப்பாளரானார். மேலும் கர்த்தரால் செய்யப்பட்டவைகளின்படியோ சொல்லப்பட்டவைகளின்படியோ சிரமமாக, உண்மையில் எழுதப்படாவிட்டாலும், அவர் தன் நினைவில் கொண்டிருந்த எல்லாவற்றையும் எழுதினார் … ஏனெனில் அவர் தான் கேள்விப்பட்டவைகளில் ஒன்றையும் விட்டுவிடாமல் அதினாலே கள்ளப் போதனைகள் வந்துவிடாதபடிக்கும் ஒரே காரியத்தில் கவனம் செலுத்தினார்.*[7]

*பிற பூர்வாங்க ஆசிரியர்களிடமிருந்தும் இதே போன்ற சாட்சியங்கள் வருகிறது. யூசிபியஸ் தானே எழுதியதாவது,*

> *இன்னமும் மாற்குவின் சுவிசேஷம் நடப்பில் இருந்தபடியால், மாற்குவிடம் [அவர்கள்] வேண்டிக் கொண்டு, அவர் பேதுருவை பின்பற்றியவர் என்று கண்டு, தங்களுக்கு போதிக்கப்பட்டவைகளை எழுத்து வடிவ உபதேசங்களாக எழுதிவைக்கும்படி கேட்டனர், அவரைச் சம்மதிக்கப் பண்ணும் வரை ஓய்ந்துவிடவில்லை, இப்படியாக வசனங்களுக்கு காரணியாகி, மாற்கு எழுதின சுவிசேஷம் என்றழைக்கப்பட்டது.*[8]

*ஆதிகால வரலாற்றுப் பதிவேடுகள் இருக்கின்றன. இரண்டாம் நூற்றாண்டின் ஆரம்ப நாட்களுக்குத் திரும்பிப் போவோமானால், பேதுரு தனது வாசகர்களுக்குக் கொடுத்த வாக்குறுதியின்படியே "இவைகளை" தனது "மரணத்துக்குப்" பின்பும் தொடர்ந்து "கிடைக்கச் செய்தார்" மாற்கு சுவிசேஷம் அவருடைய வாக்குறுதியின் நிறைவேற்றமாகக் காணுகிறது.*

## “அவருடைய மகத்துவத்தைக் கண்ணாரக் கண்டவர்களாகவே” *(1:16-18)*

***[16]நாங்கள் தந்திரமான கட்டுக்கதைகளைப் பின்பற்றினவர்களாக அல்ல, அவருடைய மகத்துவத்தைக் கண்ணார கண்டவர்களாகவே நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வல்லமையையும் வருகையையும் உங்களுக்கு அறிவித்தோம். [17]இவர் என்னுடைய நேச குமாரன், இவரிடத்தில் பிரியமாயிருக்கிறேன் என்று சொல்லுகிற சத்தம் உன்னதமான மகிமையிலிருந்து அவருக்கு உண்டாகி, பிதாவாகிய தேவனால் அவர் கனத்தையும் மகிமையையும் பெற்ற போது, [18]அவரோடே கூட நாங்கள் பரிசுத்த பருவதத்திலிருக்கையில், வானத்திலிருந்து பிறந்த அந்தச் சத்தத்தைக் கேட்டோம்.***

*இங்கே பேதுரு தனது நிருபத்தில், அவருக்கு எதிராக நேரடியாய்ச் சொல்லப்பட்ட குற்றச்சாட்டுக்கு மறுமொழி அளிக்கிறார், அல்லது ஒரு வகையில், குற்றச் சாட்டுகள் அவருக்கும் இயேசுவின் பூமிக்குரிய ஊழியத்தில் இயேசுவோடு கூட இருந்த மற்றவர்களுக்கும் எதிரிகளால் கொண்டு வரப்பட்டது. தனது அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்ள ஏதுவாக பேதுரு இயேசுவைப்பற்றிய புதுமையான கதைகளை கண்டு பிடித்து பேதுரு பேசுவதாக கள்ளப் போதகர்கள் அவரை குற்றஞ் சாட்டினர். பேதுரு அதை மறுத்தார். தனது கருத்தை வலியுறுத்தும் பொருட்டு, அவர் தனது சாட்சியத்திற்கு ஆதாரமான ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியை விவாதிக்கிறார். அது கர்த்தருடைய தெய்வீகத்தை உறுதிப்படுத்தும்படி நிகழ்ந்ததேயன்றி வேறு எதுவும் இல்லை.*

***வசனம் 16.*** *தானும் தனது சக அப்போஸ்தலர்களும் கொடுத்த சாட்சியங்கள் தந்திரமான கட்டுக் கதைகளைப் பின்பற்றினவர்களாக கொண்டு வரவில்லை என்று சொல்லி அப்போஸ்தலன் மறுத்தார். பேதுருவும் மற்றவர்களும் தங்கள் கூட்டத்தாரிடம் இயேசுவின் ஊழியத்தில் சூழ்ந்திருந்த இயல்புக்கு அப்பாற்பட்ட நிகழ்ச்சிகளை சொன்னபோது, சிலர் அதை அநேக “கட்டுக்கதைகளாகவும்” அல்லது “புனையப்பட்டகதைகளாகவுமே (muthos) கண்டார்கள்”. அநேக மதங்கள் கட்டுக்கதைகளைச் சார்ந்துள்ளன, காலம் குறிப்பிடப்படாத கதைகள், மனிதர்களுடன் இயல்புக்கு அப்பாற்பட்ட ரீதியில் கடவுள்கள் கலந்திருப்பதாகச் சொல்லி, தத்துவ ரீதியிலான மனநிலை, ஒழுக்க ரீதியான கதைகள் ஆகியவற்றை பரப்புவதற்காக சொல்லப்பட்டவை. கட்டுக்கதைகளெல்லாம் மனிதனுடைய சிக்கலான சூழ்நிலைகளை வெளிப்படுத்தும் பொருட்டு புனையப்பட்டவை. அவைகளில் வேட்கைகளும், பயங்களும், மற்றும் நம்பிக்கைகளும் உள்ளடக்கம். கிரேக்க மதம் கட்டுக்கதைகளால் முற்றிலும் ஊறிப்போனவை, அவைகளில் பல அநேக நூற்றாண்டுகள் பழமை வாய்ந்தவை. அங்கே பூர்வீக ஜனங்களும், நவ நாகரீக ஞானங்களும் இடம் பெற்றிருந்தனர், அவர்கள் திருமறை சார்ந்த நிகழ்ச்சிகளை - சிறப்பாக அற்புத கிரியைகளை சாட்சியிட்டவர்கள் - தேவர்களையும் தேவிகளையும் குறித்த கட்டுக்கதைகளால் அஞ்ஞான சமுதாயத்தை வலம் வந்தன. பிரசித்தமாக்கப்பட்ட கட்டுக்கதைகளின் பிரிவில்*

*பேதுருவின் அநுபவங்களை ஒப்பிடுவதை அவர் மறுத்தார்.*

*கிறிஸ்தவ விசுவாசம் தனது விவாதத்தை உண்மையான காலத்தின் நிகழ்ச்சிகளாக இடம் பெற்ற சத்தியத்தை அடிப்படையாகக் கொண்டது. திருமறை சாட்சியமான வரலாற்று ஆதாரத்தை மறுதலிப்பது என்பது, கிறிஸ்தவத்தின் அடிப்படைச் செய்தியை அசட்டை பண்ணுவதாகும். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வல்லமையையும் வருகையையும் உங்களுக்கு அறிவித்தோம், என்று பேதுரு அறிவித்தார். அப்போஸ்தலர்கள் "தந்திரமான கட்டுக்கதைகளை" பின்பற்றவில்லை. கிறிஸ்தவர்களைப் பொறுத்த மட்டில் வரலாறு விசுவாசத்திலிருந்து தனித்த ஒரு பகுதியாக வைக்க முடியாதது. விசுவாசமும் வரலாறும் ஒன்றோடொன்று பிணைந்துள்ளன. தமது ஊழியத்தின் ஆரம்பம் முதலே இயேசுவின் "வல்லமை" தெளிவாய்க் காணப்பட்டது. தாம் சிருஷ்டித்த மனுஷர்களுக்குள்ளே வாழ்ந்து கொண்டிருக்கையில், இயேசு அற்புதமாக சுகப்படுத்த இயலாத வியாதிகளை யெல்லாம் குணப்படுத்தினார். அவர் காற்றையும் கடலையும் அமர்த்திய போது, எதிர்பார்த்தபடியே சீஷர்கள் பிரதிக்கிரியை நடப்பித்தனர்: "இவர் யாரோ? காற்றும் கடலும் இவருக்குக் கீழ்ப்படிகிறதே" என்று சொல்லிக் கொண்டனர் (மாற்கு 4:41). அநேகப் போதகர்களையும் பலதரப்பட்ட முரண்பாடான செய்திகளையும் நூற்றாண்டுகள் கண்டு விட்டன. இயேசு மற்ற போதகர்களுடன் ஒப்பிடப்படத்தக்கவரல்ல என்பது அவரைப் பின்பற்றிப் போனவர்களுக்கு நன்றாகத் தெரியும். அவர் சத்தியமென்னும் வஸ்திரத்தைத் தரித்திருந்தார். அவர் "வல்லமையோடு" வந்திருந்ததால், மற்ற எல்லாவற்றின் மத்தியிலும், இயேசுவே சத்தியமானவர் என்பதையும் அவர்கள் அறிவார்கள். அவர் "வல்லமையுடன்" வந்திருந்தார், ஏனெனில் அவருடைய மகத்துவத்தைக் கண்ணாரக் கண்டவர்கள் முற்றிலும் நம்பத்தகு சாட்சியங்களாவர்.*

*பேதுரு குறிப்பிட்ட "நம்முடைய கர்த்தருடைய வருகை" இயேசுவின் முதலாம் வருகையைக் குறிப்பிடுவதாக சிலர் தர்க்கம் பண்ணுகின்றனர்; மற்றவர்கள் அது அவருடைய இரண்டாம் வருகையைக் குறிப்பதாக கூறுகின்றனர். எப்படியிருப்பினும், பேதுரு எதிர்கொண்ட கள்ளத் தீர்க்கதரிசிகள் இயேசு மறுபடியும் வருவார் என்பதை மறுக்கின்றனர் (3:3-10); மாம்சத்திலே அவருடைய முதலாம் வருகையைக் குறித்த கேள்வி எதுவும் இருந்ததாகக் காணப்படவில்லை, மறுரூபக் சாட்சியில் பேதுருவின் அநுபவ நிகழ்வின் போது, நடந்த நிகழ்ச்சி "நம்முடைய கர்த்தருடைய வல்லமையும் வருகையையும்" உறுதி செய்தது. கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் நேரமும் இயல்பும் தான் 2 பேதுருவில் பிரச்சனையேயொழிய, முதலாம் வருகை அல்ல.*

*கர்த்தர் தமது மறுவருகையைக் குறித்து, அறிவித்த எளிய வார்த்தைகள் மட்டுமே போதுமானது, அது மட்டும் போதும் என்று சொல்ல பேதுரு தயக்கம் காட்ட வில்லை. அவர் வருவதாக வாக்குறுதி அளித்திருந்தால், அவர் வருவார் என கிறிஸ்தவர்கள் உறுதியாக நிச்சயித்துக் கொள்ள இயலும். அவருடைய எதிர்ப்பாளர்கள் கர்த்தர் எப்பொழுது மறுபடியும் வருவார் என்று யூகம் பண்ணிக் கொண்டிருந்திருக்க வேண்டும், அல்லது அவர் ஆவிக்குரிய முறையிலோ அல்லது ஏதோ நேரடியாக அல்லாத ஒரு வகையிலோ, ஏற்கனவே வந்து விட்டார் என்று அறிவித்திருக்கக் கூடும். பேதுரு "பரிசுத்தம*

லையிலே" இயேசுவின் வல்லமையை பார்த்திருந்தார் (1:18). அங்கே அவர் கண்ட மறுரூபக் காட்சியே இயேசு மறுபடியும் வருவார் என்பதற்கு போதிய சாட்சியமாயிருந்தது. அந்த வருகை இன்னும் எதிர்கால சம்பவமாக இருந்தது.

பேதுரு இயேசுவின் இரண்டாம் வருகையை மனதில் வைத்துதான் அப்படிச் சொன்னார் என்பதற்கு கூடுதல் நம்பிக்கையுண்டு. அவருடைய வார்த்தைகள் இயேசுவின் முதல் வருகையைக் குறிக்குமானால் அது கலிலேயாவிலும் யூதேயாவிலும் முதல் தோற்றமாக குறிப்பிடப்பட்டால், புதிய ஏற்பாட்டில் இந்த ஒரு இடத்தில் மட்டுமே இயேசு மனுஷீகத்தில் வருவதாக (parousia, "வருகை") பயன்படுத்தப்பட்டுள்ளது. "நம்முடைய கர்த்தருடைய வருகையை" பேதுரு குறிப்பிட்டிருந்தால் அது எதிர்காலத்தைக் குறித்தே பேசினார் என்பதில் சந்தேமில்லை.

பேதுரு "வல்லமை" என்ற வார்த்தையை பயன்படுத்தி மனுஷ குமாரன் ஜனங்களுக்குள் உலாவின நேரங்களை திரும்பிப் பார்க்கச் செய்கிறார். பிறகு அவர் கண்களைத் திருப்பி இன்னும் வரவிருந்த காரியங்களுக்கு ஏறெடுக்கிறார். அப்போஸ்தலர்கள் இயேசுவின் "வல்லமையை" அறியப்பண்ணி, கூடவே அவருடைய "வருகையையும்" தெரியப் பண்ணினர். இயேசு கடந்த காலத்தில் வாழ்ந்த வரலாற்று நினைவுகூருதலில் இடம் பெற்றவர்களைக் காட்டிலும் மேலானவர். அவர் உயிருள்ள (ஜீவனுள்ள) கர்த்தராகவுமிருக்கிறார், மறுபடியும் "வருகிறார்."

தனது முதல் நிருபத்தில், அப்போஸ்தலன் கர்த்தரின் "வெளிப்படுத்தலைக்" குறித்துப் பேசினார் (apokalupsis; 1 பேதுரு 1:7, 13; 4:13), ஆனால் அவர் தன் இரண்டாவது நிருபத்தில் "வருகை" எனும் வார்த்தையை தெரிந்து கொண்டார் (parousia; 2 பேதுரு 1:16; 3:4, 12). Parousia எனும் வார்த்தை சில நேரங்களில் பொதுவான அர்த்தத்தில் எந்த ஒருவருடைய பிரசன்னமாகுதலுக்கோ அல்லது வருகைக்கோ பயன்படுத்தும் சொல்; ஆனால் சீஷர்கள் சுவிசேஷத்தை பரப்பினபோது, அது "கர்த்தருடைய" "வருகையை" குறிப்பிடுகிற தனிப்பட்ட நுட்பமிகும் வார்த்தையாயிற்று, யுகத்தின் முடிவில் அவர் உலகத்தை நியாயந்தீர்ப்பார். பேதுருவைப் போலவே பவுலும் "வெளிப்படுதல்" "வருகை" எனும் வார்த்தைகள் இரண்டையும் ஒன்றுக்குப்பதில் ஒன்றாக பயன்படுத்தினார்.

அஞ்ஞான உலகில் பேசப்பட்ட கட்டுக்கதைகள் பொதுவானவைகளும் மனிதனைக் குறித்து எப்படிப்பட்ட சமுதாய மற்றும் மனோதத்துவ விளக்கங்களைக் கொண்டிருந்த போதிலும், அவைகள் பொழுது போக்கு அம்ஸம் மட்டுமே பெற்றிருந்ததேயொழிய வேறெந்த நோக்கமுமில்லாத பொதுவான காரியமாயிருந்தது. அவைகள் நடந்த வரலாற்று நிகழ்ச்சிபற்றி உண்மைகளல்ல. பேதுருவின் செய்தி வித்தியாசமாக, கர்த்தருடைய "வல்லமை" மற்றும் "வருகையைப் பற்றினவையாக இருந்தது". அவர் ஒரு காலத்தில் வாழ்ந்த மனிதனுக்கு சாட்சியிட்டார், தனது வார்த்தைகளாலும் செயல்களாலும் தம் "வல்லமையை" அறிவித்த ஒரு மனிதனின் வரலாறு அது. பாலஸ்தீனாவில் வாழ்ந்த, அதே இயேசு காலத்தின் முடிவில் நியாயத்தீர்ப்பில் தோன்றுவார், அப்பொழுது பூமியும் அதிலுள்ள யாவும் அழிவுண்டு போகும் (3:10, 12).

"தந்திரமான கட்டுக் கதைகளைப்" பின்பற்றுவதற்குப் பதிலாக

அவரும் மற்றவர்களும் "அவருடைய மகத்துவத்திற்கு கண்ணாரக் கண்ட சாட்சிகள்" என்று பேதுரு அறிவித்தார். "கண்ணாரக் கண்ட சாட்சி" என்ற மொழிபெயர்ப்புச் சொல் (*epoptēs*), புதிய ஏற்பாட்டில் இங்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது; ஆகிலும் இதே அப்போஸ்தலன் இந்த வார்த்தையின் வினைச்சொல்லாகிய *epopteuō* என்பதை இரண்டு முறை பயன்படுத்தியிருக்கிறார் (1 பேதுரு 2:12; 3:2). அது புதிய ஏற்பாட்டில் வேறு எங்கும் பயன்படுத்தப்படவில்லை.

பேதுரு தம் வாசகர்களுக்குத் தாம் கேள்விப்பட்டதைச் சொல்லிக் கொண்டிருக்கவில்லை. கள்ளப் போதகர்கள், கர்த்தரைப் பற்றிச் சொல்லப்பட்டவைகளின் கருத்துக்களைக்கூற முடிந்தது, ஆனால் பேதுரு அங்கு இருந்திருந்தார். அப்போஸ்தலன் 1:15ல் "நான்" என்பதிலிருந்து 1:16ல் "நாங்கள்" என்று கூறச் சென்றது தற்செயலானதல்ல. அவர் கண்ணால் கண்ட ஒரு சாட்சியாயிருந்தார், ஆனால் அவர் மாத்திரம் அங்கு இருக்கவில்லை, பேதுருவின் சாட்சியம் மற்றவர்களால் உறுதி செய்யப்பட்டது. அப்போஸ்தலன் தமது கவனத்தை ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சிக்கு, ஒரு விசேஷமான நிகழ்ச்சிக்கு அவர் சாட்சியாயிருந்த நிகழ்ச்சிக்குத் திருப்பினார்.

**வசனம் 17.** சுவிசேஷ ஒப்பீடுகளில், மறுரூபக் காட்சி இயேசு யார் என்பதை சீஷர்கள் புரிந்து கொள்ளத் தக்க ஒரு திருப்பு முனையாக அமைந்திருந்தது (மத்தேயு 17:1-8; மாற்கு 9:2-8; லூக்கா 9:28-36). அக்காட்சி தமது சீஷர்களுடனான இயேசுவின் உரையாடல் செசரியா பிலிப்பியில் நிகழ்ந்ததைத் தொடர்ந்து இடம் பெற்றது (மத்தேயு 16:13-20; மாற்கு 8:27-30; லூக்கா 9:18-22). இயேசு அவர்களிடம், "என்னை ஜனங்கள் யாரென்று சொல்லுகிறார்கள்?" என்று கேட்டார். அங்கே பலதரப்பட்ட கருத்துக்கள் கொடுக்கப்பட்டன. அதன் பின்பு ஒரு சிக்கலான கேள்வியாக, "நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள்?" என்று கேட்டார். இந்தக் கேள்வியால் சீஷர்கள் திக்கு முக்காடியிருப்பார்கள். இயேசு ஒரு தீர்க்கதரிசியா? அவர்தான் மேசியாவா? இந்த இரண்டு கேள்விகளுக்கும் பதில் ஆம் என்று சொன்னாலும், அவர் தெய்வீகமான, தேவனுடைய குமாரன் என்று புரிந்து கொள்வதற்கு இன்னமும் வெகு தொலைவில் இருந்தனர்.

இதற்குப் பின்புதான் இயேசு மூன்று பேருடன், பேதுரு, யாக்கோபு, மற்றும் யோவானுடன், மலையின் மேல் ஏறினார். அவர் அங்கே மறுரூபமாகிற காட்சியைக் கண்டார்கள். அங்கே அவர்கள் அவருடன் மோசேயையும் எலியாவையும் கண்டார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக அங்கே அவர்கள் தேவனுடைய சாட்சியத்தையும் அவரைக் குறித்து சொல்லப்பட்டதையும் கேட்டார்கள், நடந்த சம்பவம் கட்டுக்கதையல்ல. பேதுரு இதை மேற்கோளாகக் காட்டுகிறார் ஏனெனில், அவர் அனுபவப்பட்ட எல்லாவற்றிலும், தேவன் கொடுத்த இந்த சாட்சியம் மிகவும் வலியுறுத்தலாயிருந்தது. மலையின் மேல் கூட, அவரோ மற்ற அப்போஸ்தலர்களோ அவர்கள் கண்ட காட்சியின் குறிப்பு உணர்த்துதலை புரிந்து கொள்ளவில்லை. இப்பொழுது, நடக்கிற நிகழ்ச்சிகள் கடந்துபோய் அநேக ஆண்டுகளாகிவிட்டன, அவரோ அவைகளை நன்கு புரிந்து கொண்டார்.

பேதுரு சொல்லும் போது மலையின் மேல் பிதாவாகிய தேவனால் அவர்

*கனத்தையும் மகிமையையும் பெற்றுக் கொண்டார் என்றார். மலையின் மீது தேவன் இயேசுவைத் தமது சொந்தக் குமாரன் என்று சொன்னார். அவரைக் கனப்படுத்தினார். மேலும், இயேசு தமது சீஷர்களுக்கு முன்பாக அவர் மறுரூபமானார். "அவருடைய முகரூபம் மாறிற்று, அவருடைய வஸ்திரம் வெண்மையாகி பிரகாசித்தது" (லூக்கா 9:29). அவர்கள் இதுவரை காணாதவாறு அவருடைய மகிமையைக் கண்டார்கள். லூக்கா, "அவர்கள் விழித்து, அவருடைய மகிமையைக் கண்டார்கள்" என்று பதிவு செய்துள்ளார் (லூக்கா 9:32). வெளிச்சமும் பிரகாசமும் தேவனுடைய பிரசன்னமாகுதலோடு சம்பந்தப்பட்டிருப்பதை திருமறையில் அடிக்கடி காணலாம். மோசே பற்றி எரிகிற ஒரு முட்செடியில் தேவனுடைய பிரசன்னத்தைக் கண்டார் (யாத்திராகமம் 3:3-6). பிரகாசிக்கிற வஸ்திரந்தரித்தவனாக தேவ தூதன் கொர்நெலியுவுக்கு முன்பாக நின்றான் (நடபடிகள் 10:30). ஏசாயா "உன் வெளிச்சத்தினிடத்துக்கு ஜாதிகளும், உதிக்கிற உன் ஒளியினிடத்துக்கு ராஜாக்களும் நடந்து வருவார்கள்" (ஏசாயா 60:3), என்று எழுதினார். இப்படிப்பட்ட பிரகாசத்தைத் தான் தன்னோடே இருந்தவர்களுடன் பேதுரு மலையின் மேல் கண்டார்.*

*மேலும் அப்போஸ்தலன் தேவனை அடையாளப்படுத்தி அவருடைய மகத்துவத்தைக் கண்டதாகக் கூறினார். தேவன் மலையில் பேசினார் என்று எந்த சுவிசேஷ விபரமும் கூறாமல் இருப்பது ஆர்வத்திற்குரியதாய் இருக்கிறது. எல்லா மூன்று விபரங்களுமே, மேகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாயிற்றென்று கூறுகின்றன. நிச்சயமாக இயேசு தன்னுடைய குமாரன் என்று உரிமை கோரும் சத்தம் தேவனுடையதாகத்தான் இருக்க வேண்டும். அநேக ஆண்டுகள் கடந்து எழுதினாலும், பேதுரு தேவனுடைய மகத்துவம் தன் மீதும் மற்றவர்கள் மீதும் ஏற்படுத்தின நல் அபிப்பிராயத்தை பேதுரு நினைவு கூர்ந்தார். "பிதாவாகிய தேவன்," "மகத்துவமானவர்," அவர்களுடைய சிநேகிதரும் போதகருமாகிய அவர் தேவனுடைய குமாரனேயன்றி வேறல்ல என்று உணர்வடையச் செய்தார்.*

*மலையில் மேல் தோன்றிய அந்த "மகத்துவமுள்ள" சத்தம் இவர் என்னுடைய நேசகுமாரன் இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது. இந்த வார்த்தைகள் மத்தேயுவில் சொல்லப்பட்டவைகளுக்கு சமீபித்திருக்கிறது, ஆகிலும் எந்த சுவிசேஷப்புத்தகத்திலும் ஒத்த மாதிரியாக ஒரே விதமாகச் சொல்லப்படவில்லை.[9] ஆகிலும் அவர்கள் (நான்கு சுவிசேஷங்களுமே) உறுதியிட்டுச் சொல்லுவதில் சற்று வித்தியாசப்படுகின்றனர். மூன்று புத்தகங்களின் சுவிசேஷ ஒப்பீடுகளில் "இவருக்குச் செவி கொடுங்கள்!" என்ற வார்த்தையை முக்கியப்படுத்துகின்றனர். பேதுரு அதை ஏன் பதிவு பண்ணவில்லை என்பதை உறுதியாகச் சொல்ல இயலவில்லை. ஒருவேளை மலையின் மேல் தேவன் கொடுத்த சாட்சியத்தை வரலாற்று ரீதியாக உறுதிப்படுத்துவதாக பேதுரு தெரிந்து கொண்டிருக்கலாம். இயேசு தேவனுடைய குமாரன் என்று அடையாளப்படுத்துவதை இங்கு முக்கியப்படுத்தினார், இயேசுவின் அதிகாரத்தையல்ல.*

***வசனம் 18.*** *பேதுரு "தந்திரமான கட்டுக்கதைகளை" போதிக்கிறார் என்ற குற்றச் சாட்டைத் தொடர்ந்து அவர் மூன்று ஆலோசனைகளைக் கொடுக்கிறார்: (1) மலையிலே அவர் மட்டும் தனித்திருக்கவில்லை. அந்த*

*வசனப்பகுதி முழுவதும் அவர் பயன்படுத்தியுள்ள பிரதிப் பெயர்ச்சொல் "நாங்கள்" அவரும், யாக்கோபும், யோவானும் அங்கே இருந்திருந்தார்கள். மூன்று பேருடைய சாட்சியமும் ஒத்துப் போகக் கூடியதாயிருக்கிறது. (2) கள்ளப் போதகர்களைப் போல அற்பக் காரியத்துக்காக அமளிப்படுத்துவதும் எதெற்கெடுத்தாலும் முட்டுக் கட்டைப் போடுவதும் போன்ற காரியங்களைச் செய்யாமல் பேதுரு கர்த்தரோடிருந்தார். (3) அவர் பார்த்தது மாத்திரமல்ல, வானத்திலிருந்து ஒரு சத்தத்தையும் கேட்டார்.*

*மலையின் மேலே நடந்த சம்பவம் பற்றி பேதுரு குறிப்பிடுகையில் "பரிசுத்த பருவதத்தில்" இருக்கையில் என்று சொன்னதில் ஆர்வத்தை எழுப்பும் ஒரு காரியம் உண்டு. "பர்வதம்" எப்படி, என்ன பொருளில் பரிசுத்தமாயிருக்கக் கூடும்? எந்த ஒரு பொருள் தேவனுக்கென்று ஏதோ ஒருவகையில் பிரித்து வைக்கப்படுகிறதோ அது பரிசுத்தமானது எனப்பட்டது. இன்னொரு வகையில் விளக்கிக் சொல்லுவதானால் தேவனும் குறிப்பிட்ட சில பொருளும் அவரோடு சம்பந்தப்பட்டிருக்குமானால் அது பரிசுத்தமானது. இந்த பருவதம் மறுரூபமாக்கப்பட்ட நிகழ்ச்சிக்கு முன்பாகவே பரிசுத்தமானதாயிருந்ததா, அல்லது அந்த நேரத்தில் பரிசுத்த பருவதமாயிற்றா? "பரிசுத்தம்" என்ற குணப்பெயர்ச்சொல் கட்டிடங்களுக்கோ அல்லது பூகோள ரீதியான பொருட்களுக்கோ சொல்லப்படுவது திருமறையின்படி ஒரு வழக்கத்துக்கு மாறான காரியமல்ல. பொதுவாக தேவாலயம் இருந்த மலை "பரிசுத்த பருவதம் எனப்பட்டது," அதன் மேல் இருந்த அமைப்பு "பரிசுத்த ஆலயம்" எனப்பட்டது. தேவன் இஸ்ரவேல் ஜனங்களை சுதந்தரித்துக் கொள்ளும்படி கொடுத்த தேசம் "பரிசுத்த தேசம்" எனப்பட்டது (சகரியா 2:12).*

*மறுரூபக் காட்சி இடம் பெற்ற மலை எது என்பது குறித்து எந்த சுவிசேஷப் புத்தகமும் போதியளவு விளக்கத்தைக் கொடுக்கவில்லை. சிலர் தர்க்கித்து எர்மோன் மலைகளின் பல்வேறு உச்சிகளை குறிப்பிடுகின்றனர்; வேறு சிலர் தபோர் மலையென உறுதிப்படுத்துகின்றனர். எந்த மலையாக இருந்தாலும் சரி, மறுரூபக் காட்சி இடம் பெற்ற அந்த மலை எப்படியோ பரிசுத்த பருவதம் என்று பேதுரு சொன்னபடி நித்திய பெயரைப் பெறக் கூடியதாக இருக்கிறது என்று அவர் அர்த்தப்படுத்த வில்லை. அங்கு நடந்த நிகழ்ச்சி பரிசுத்தமானது, அவை நடந்த இடமல்ல.*

## *வசனங்கள் ஏவப்பட்டதும் அதன் அதிகாரமும் (1:19-21)*

***[19]அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனமும் நமக்கு உண்டு; பொழுது விடிந்து விடிவெள்ளி உங்கள் இருதயங்களில் உதிக்குமளவும் இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்கைப் போன்ற அவ்வசனத்தைக் கவனித்திருப்பது நலமாயிருக்கும். [20]வேதத்திலுள்ள எந்த தீர்க்கதரிசனமும் சுய தோற்றமான பொருளையுடையதாயிராதென்று நீங்கள் முந்தி அறிய வேண்டியது. [21]தீர்க்க தரிசனமானது ஒருகாலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாக வில்லை; தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டு பேசினார்கள்.***

*இயேசுவின் தெய்வீகத் தன்மைக்கு சாட்சியமளிக்கும் ஆச்சரியமூட்டும் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சி பற்றிய சிந்தனையிலிருந்து பேதுரு நகர்ந்து, வசனத்தின் தன்மையைக் குறித்து விளக்கப்படுத்தி பொதுவான வியாக்கியானத்துக்குத் திரும்புகிறார். அதன் செயலிலே, திருமறை முழுவதிலும் அதன் சுய தன்மையைக் குறிக்கும் மிகத்தெளிவான வாக்கியத்தைக் கொடுக்கிறார். திருமறை எல்லா புத்தங்களுக்குள்ளும் தனித்துவம் பெற்றதும் தேவனிடத்திலிருந்து பெற்ற செய்தியை அது கொண்டிருக்கிறது என்றும் கிறிஸ்தவர்கள் விசுவாசிக்கிறார்கள். தேவனுடைய அதிகாரமும் அவரது பிரசன்னமும் அதன் பக்கங்களில் இருப்பதாக அவர்கள் உறுதிப்படுத்துகின்றனர், எனவே பக்தி சம்பந்தப்பட்ட மற்றும் ஒழுக்கம் சம்பந்தப்பட்ட சகல காரியங்களுக்கும் அதுவே போதுமானதாக இருக்கிறது. அவிசுவாசியானவன் கிறிஸ்தவ பகுத்தறிவுக்குறித்தும் இந்த நம்பிக்கையைக் குறித்தும் கேள்வி கேட்கக் கூடும். திருமறை தேவனிடத்திலிருந்து வந்தது என்று அது சொல்கிறது என்பதால் அது குறித்த தர்க்கம் தனது ஆதாரத்தையும் அதிகாரத்தையும் அவிசுவாசிகளிடம் நிலை நிறுத்த போதுமானதாயில்லை என்பதே. இருந்தாலும் திருமறை தனக்குத்தானே என்ன சொல்லுகிறது என்பது ஒரு துவக்கக் கருத்தாகும்.*

***வசனம் 19.*** *ஆங்கில மொழிபெயர்ப்புகள் கிரேக்கத்தை இரண்டு வகையில் பிரதிபலிக்கின்றன: (1)* ***தீர்க்கதரிசன வசனங்களில்*** *பேதுருவின் வாசகர்கள் மிக அதிகமான நம்பிக்கையை வைக்கலாம், ஏனெனில் குமாரனைக்குறித்து பருவதத்திலே தேவன் கொடுத்த சாட்சியத்தை* ***அதிக உறுதியானதாக ஆக்கியது.*** NASB *மொழிபெயர்ப்பில் இதுவே பேதுரு சொன்னதன் பொருளாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. (2) மாற்றாக, அப்போஸ்தலன் சொல்ல முற்பட்டதெல்லாம் "தீர்க்கதரிசன வசனங்கள்" - பேதுருவின் வாசகர்களில் சிலர் அவர் மலையிலிருந்து கொடுத்த அறிக்கையைக் காட்டிலும் மேலாக கிறிஸ்துவைக்குறித்த சாட்சியங்களாக - இயேசு தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டன* KJV *இதை "அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனங்களும் உண்டு" என்று மொழிபெயர்த்துள்ளது.*[10] *அதுதான் பேதுருவின் பொருள் என்றால், அதிக உறுதியான "தீர்க்கதரிசன வசனங்கள்" வாசகர்களை அப்போஸ்தலரின் சாட்சியத்துக்கு முழு நம்பிக்கை வைக்கும்படி கோருகிறது.*

*இதில் எந்த விளக்கமும் இருக்கக்கூடும். எப்படியிருப்பினும், அப்போஸ்தலன் கள்ளப் போதகர்களால் தாக்கப்பட்டதால், அவர்கள்தான் அவரை "தந்திரமான கட்டுக்கதைகளை" போதிப்பதாக குற்றஞ்சாட்டினர் (1:16), பேதுரு தமது வாசகர்களுக்குக் கொடுத்திருந்த சாட்சியங்களை வசனங்களும் உறுதிபடுத்துகின்றன என்பதை நிச்சயப்படுத்திக் கொண்டார். அநேக மொழிபெயர்ப்புகளும் விளக்கவுரைகளும்* NASB *யுடன் ஒத்துப் போனாலும்,* KJV *மொழிபெயர்ப்பே சரியானதாக இருக்கக் கூடும். தேவன் பருவதத்திலே கிறிஸ்துவுக்குக் கொடுத்த சாட்சியத்தின் அறிக்கையாக பேதுரு சொன்னவைகளை நம்பாதவர்களுக்கு, "அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனங்கள்" இயேசு தேவனுடைய குமாரன் என்று தெளிவாக்கியது.*

*ஆகிலும் "தீர்க்கதரிசன வசனத்துக்கு" கிறிஸ்தவர்கள்* ***கவனித்திருப்பது*** *போதுமான காரணமாயிருக்கிறது என்பதை ஒருவர் புரிந்து கொள்கிறார். "தீர்க்கதரிசன வசனங்கள்" என்று பேதுரு குறிப்பிட்டது, தீர்க்கதரிசன*

ஆகமங்களை (இலக்கியங்களை) மட்டும் குறிப்பிடாமல், அவர் அனைத்து பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்களையும் குறிப்பிட்டார். யோவான் ஸ்நானன் பிரசங்கிக்க தொடங்கினது முதல், இயேசுவின் ஜீவியமும் மரணமும், இயேசுவின் போதனைகளும் செயல்களும் (கிரியைகளும்) ஆகிய அனைத்தும் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்களின் நிறைவேற்றங்கள் என புரிந்து கொள்ளப்பட்டது. இயேசுவே வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மேசியா; அவர் தேவனால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ராஜ்யத்தை திறந்து வைத்தார். மத்தேயு சுவிசேஷத்தை பழைய ஏற்பாட்டுக்கு ஒப்பிட்டு பயன்பாட்டை ஆராய்ந்தால் இயேசுவின் ஜீவியத்தின் ஒவ்வொரு தோற்றமும் ஊழியமும் ஆன்மீக அறிவுடன் கூடிய உண்மையென நன்கு அறியப்பட்டது. இயேசு உயிர்த்தெழுந்த பின்பு சீஷர்களுக்கு காணப்பட்டு, அவர், "மோசேயின் நியாயப்பிரமாணத்திலும் தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலும் சங்கீதங்களிலும் என்னைக்குறித்து எழுதியிருக்கிறவைகளெல்லாம் நிறைவேற வேண்டியது" என்றார் (லூக்கா 24:44). அப்போஸ்தலர் நடபடிகளின் துவக்கத்தில் பேதுருவின் பிரசங்கம் பழைய ஏற்பாட்டு வசனங்களால் நிரப்பப்பட்ட தீர்க்கதரிசனங்களை கொண்டுள்ளது. 1 பேதுருவில், அப்போஸ்தலன், திருப்பித் திருப்பி "தீர்க்கதரிசன வசனத்தை" சுட்டிக்காட்டுகிறார் (1:24, 25; 2:4-10, 22-25; 3:10-12, 20-22; 4:18; 5:5).

சுவிசேஷத்தை மதிக்காத கள்ளப் போதகர்கள் மற்றும் அவர்களைப் பற்றிக் கொண்டு பின் செல்லுவோர், ஆகியோரை பேதுரு எச்சரித்து, "தீர்க்கதரிசன வரத்தை" "நீங்கள் கவனித்திருப்பது நலம்" என்று சொன்னார். அப்போஸ்தலன் கள்ளப் போதகர்கள்மீது ஒரு முழுமையான நேருக்கு நேரான தாக்குதலை நடப்பிக்க தனக்கு அனல் மூட்டிக் கொண்டார். கோட்பாட்டுநிலையில், ஒருவர் போதிக்கும் சத்தியம் அதன் இயல்பு ரீதியிலான தன்மை அடிப்படையில் எந்த அளவு தகுதியுள்ளது என மதிப்பீடு செய்ய வேண்டும். எப்படியாகிலும், இந்த வழியில் இது நடைபெறுவதில்லை. முதலாவதாக அந்த நபரை நாம் மதிப்பீடு செய்ய வேண்டும், பிறகு அவர் போதிக்கிற வார்த்தைகளை அவர் எப்படிப்பட்ட நபர் என்ற முடிவின் மூலம் வடிகட்டி மதிப்பிட வேண்டும். அப்போஸ்தலனாகிய பேதுரு தான் போதிக்கிற கிறிஸ்தவ சமுதாயத்தில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்த வேண்டுமானால் முதலாவதாக அவர் தன்னை நம்பகத்தன்மைக்கு ஆயத்தப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதை புரிந்திருந்தார். அதை அவர் மறுரூபக் காட்சியின் அனுபவத்தால் நடந்தவைகளை பயன்படுத்தி செயல்படுத்தினார். கூடுதலாக, தான் போதித்த சத்திய வசனங்களுக்கு தேவனுடைய சொந்த சாட்சியமாகிய வசனத்தை ஆதாரமாக்கினார்.

பேதுருவின் சாட்சியத்தை "தந்திரமான கட்டுக்கதைகள்" என்ற முடிவுக்கு வந்தவர்களும் கூட பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்களுக்கு கவனம் செலுத்த வேண்டும், வசனங்கள் **இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்கைப் போன்றது.** "இருளுள்ள ஸ்தலம்" *(auchmēros)* எனும் வார்த்தை நிருபத்தில் அநேக இடங்களில் ஒன்றாக புதிய ஏற்பாட்டில் இங்கு மட்டுமே இடம் பெற்றுள்ளது. அது மிகவும் வண்ணமிகு வார்த்தை "விளக்கு" ஒரு கும்மிருட்டில் பிரகாசிப்பதில்லை, ஆனால் இருளுள்ள இடம், இழிவான இடம், மப்பும் மந்தாரமுமான, மூடுபனியால் சூழப்பட்ட இடத்தில்

*பிரகாசிக்கும், "இருளுள்ள ஸ்தலம்" என்பது இந்த உலகம், பேதுருவும் அவருடைய வாசகர்களும் வாழ்ந்து கொண்டிருந்த இடம். அந்த உலகம் விசுவாசிகள் தொடர்ந்து வாழ்ந்து வரும் இடமாக இருக்கிறது. அந்த நிழல் படிந்த உலகத்தில் தேவனுடைய வசனம் "பிரகாசிக்கிற விளக்காக" உள்ளது. திருமறையிலேயே அதிக நீளமான அதிகாரத்தைக் கொண்ட சங்கீதம் 119, அது நியாயப்பிரமாணத்தை சிறப்பித்து பேசும் அதிகாரம். பேதுருவைப் போலவே சங்கீதக்காரனும் தேவனுடைய வசனம் பாதைக்கு வெளிச்சமாயிருக்கிற விளக்கைப் போன்றது என்று சொன்னான். "உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது" என்று சொன்னான் (சங்கீதம் 119:105).*

*2 பேதுருவில் பேதுரு முன்னுரைத்தது போல இந்த இருள் நிறைந்த உலகம், வசனத்தின் கடினங்களினூடே வெளிச்சம் வரும் காலம் இருக்கும் என்று அழகாக சித்தரிக்கப்பட்டது, "அது* ***பொழுது விடிந்து விடிவெள்ளி உங்கள் இருதயங்களில் உதிக்குமளவும்*** *என்று வழிகாட்டுகிறது". இந்தக் காட்சி ஒரு நீண்ட இரவில் காத்திருந்து விடிதலுக்கான அடையாளத்தைக் காண்பது போன்றது. ஒருவகையில் பேதுருவின் சிந்தனைகள் சங்கீதக்காரனின் வார்த்தைகளால் ஏவப்பட்டிருக்கலாம்: "கர்த்தருக்குக் காத்திருக்கிறேன்; என் ஆத்துமா காத்திருக்கிறது; அவருடைய வார்த்தையை நம்பியிருக்கிறேன் எப்பொழுது விடியும் என்று காத்திருக்கிற ஜாமக்காரரைப் பார்க்கிலும் அதிகமாய் என் ஆத்துமா ஆண்டவருக்குக் காத்திருக்கிறது" (சங்கீதம் 130:5, 6).*

*எண்ணாகமம் 24:17ல் உள்ள "... ஒரு நட்சத்திரம் யாக்கோபிலிருந்து உதிக்கும்," என்பதே "விடிவெள்ளி நட்சத்திரம் உதிக்கும் வரை" என்பதை ஏவ தூண்டியிருக்கும் என்பது பொதுவாக ஒத்துக்கொள்ளப்படுகிறது. சொல்லப்படுகிறது. கிறிஸ்தவர்கள் யூதர்கள் ஆகிய இருசாராருமே எண்ணாகமம் 24:17ஐ மேசியத்துவ தீர்க்கதரிசனம் என்று புரிந்து கொண்டுள்ளனர். கர்த்தருடைய இரண்டாம் வருகையைக் குறித்துப் பேசும் ஒரு வசனப்பகுதியில், இந்த விடிவெள்ளி "உங்கள் இருதயங்களில் உதிக்குமளவும்" என்று பேதுரு சேர்த்துச் சொல்லுகிறது எதிர்பார்த்திராத ஒன்று. அநேகமாக அவர் விடிந்து வரும் புதிய யுகத்தில் நம்பிக்கைகளும் கனவுகளும் உணரப்படும்போது விசுவாசிகளில் இருதயங்கள் மகிழ்வுறும் என்று கூறியிருக்கலாம். இந்த நிருபத்தின் பின்பகுதியில், யுகத்தின் கடைசி நாட்கள் மற்றும் நியாயத்தீர்ப்பு ஆகியவைப்பற்றி இதே நிகழ்ச்சிகளில் பேசினார். "கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிற விதமாய் வரும், அப்பொழுது வானங்கள் மடமடவென்று அகன்று போம்" என்றார் (3:10). விசுவாசிகளுக்கு அது சந்தோஷமும் மகிமையான வெளிச்சமுமிக்க நாளாயிருக்கும். பொழுது விடிந்து வருவது என்பது ஒரு புதியதும், பாடுகளிலிருந்தும் பாவங்களிலுமிருந்தும் விடுதலை பெறுவதையும் யோசனையாகச் சொல்லுகிறது.*

***வசனம் 20.*** *"தீர்க்கதரிசன வசனங்களுக்கு" ஜனங்கள் நன்றாக "கவனம் செலுத்துகிறார்கள்" என்பதை மனதிற்கொண்டு, வசனம் அதிகாரமிக்கதாய் இருப்பது ஏன் என்று தொடர்ந்து அப்போஸ்தலன் விளக்கமளிக்கிறார். அது* ***முதல்*** *முக்கியத்துவமானதாக விசுவாசிகளுக்கு குறிப்பிடுகையில்* ***வேதத்திலுள்ள எந்த தீர்க்கதரிசனமும் சுய தோற்றமான***

**பொருளையுடையதாயிராது** என்று முந்தி அறிய வேண்டியது என்று சொன்னார். இந்த வசனத்தின் அர்த்தம் "பொருளையுடையதாயிராதென்று" *(epilusis)* என்று மொழிபெயர்க்கப்பட்ட வினைச்சொல்லை சார்ந்திருக்கிறது. புதிய ஏற்பாட்டில் இங்கு மட்டுமே இந்த அமைப்பில் சொல்லுகிறது. வினைச்சொல் தொடர்புடைய வார்த்தையின் பொருள் "விளக்கிச் சொல்லுதல்" அல்லது "விவரித்தல்" என்று மாற்கு 4:34ல் காணுகிறோம்; ஆகையால், "விவரித்தல்" என்பது பெயர்ச்சொல்லின் நல்ல மொழிபெயர்ப்பு, இருந்தாலும் இந்த வசனப்பகுதி சற்றுத் தெளிவற்றதாகவே காணுகிறது. "விவரித்தல்" என்பது சாதாரணமாக இரண்டாம் நிலைத் தொடர்பு. ஒரு பேச்சாளர் அல்லது (புத்தக) ஆசிரியர் ஒரு வாக்கியத்தைச் சொல்லுகிறார்; கேட்டுக் கொண்டிருக்கும் ஒருவரோ அல்லது வாசகரோ அதை விவரிக்கிறார், வசனத்தைப் பதிவு செய்யும் போது "விவரித்துச் சொல்லுதல்" எங்கே இடம் பெறுகிறது? வசனப் பகுதியைப் புரிந்து கொள்ள இரண்டு சாத்தியக்கூறுகள் உள்ளன.

முதலாவதாக, பேதுரு, ஒருவேளை தீர்க்க தரிசிகள் வேதவசன வார்த்தைகளை பதிவு செய்யும்போது, அவர்கள் தங்களுடைய சொந்த கதைகளைச் சொல்லும்படி விடப்படவில்லை, "விவரித்துச் சொல்லுதல்" என்பது ஒருவேளை கனவாகவோ அல்லது மெய்மறந்த நிலையில் ஆட்கொள்ளப்பட்டு தேவ செய்தி அருளப்பட்டது என பொருள்படுத்தியிருக்கலாம். வேத வசனத்தில் தீர்க்க தரிசனம் என்பது தனிப்பட்ட ரீதியில் தனி நபர் அளிக்கும் சுய விவரங்களுக்கு மேற்பட்டதாயிருந்தது. தேவன் இதிலே நேரடியாக சம்பந்தப்பட்டிருந்தார். தீர்க்கதரிசிகள் வேதவசனங்களில் பதிவு செய்துள்ளவைகளெல்லாம் உண்மையானவைகள் என்று அவர் நிச்சயப்படுத்தினார். இந்த சிந்தனைகள் பவுல் உறுதிப்படுத்துவதற்கு ஒத்திருக்கிறது. "வேதவாக்கியங்களெல்லாம் தேவனால் அருளப்பட்டிருக்கிறது" (2 தீமோத்தேயு 3:16). இரண்டாவது சாத்தியக்கூறு என்னவெனில் கள்ளப் போதகர்களால் கவர்ச்சிகரமான விவரங்களை (விளக்கங்களை) கொடுக்கப்படுவதை மனதில் கொண்டு பேதுரு எழுதியிருக்கலாம். அவர் சொன்ன கருத்து வேத வாக்கியங்களுக்கு விளக்கங் கொடுக்கும் முழு பணியும் சபைக்குரியது என்பதாக இருக்கலாம். தனிப்பட்டோரின் சுய விளக்கங்கள் அதிகாரமளிக்கப்பட்டதல்ல. சபையால் அளிக்கப்படும் விளக்கத்திலிருந்து தனி நபர் கொடுக்கும் சுய விளக்கம் மாறுபட்டிருக்குமானால், தனிப்பட்டவரின் சுய விளக்கம் தவறானதுதான். வேத வசனங்கள் தனிப்பட்ட நபர்களின் சுய விளக்கவுரைக்குரியவைகளல்ல.[11]

முதல் விளக்கவுரை, எவ்வித சந்தேகமுமில்லாமல், சரியான ஒன்று. அதே "தீர்க்கதரிசன வார்த்தை" தான் வசனங்கள் 19, 20க்கான பாடக்கருத்து. விசுவாசிகள் வேத வசனங்களுக்கு செவி சாய்க்கும்படி அப்போஸ்தலன் சொன்னார், பிறகு ஏன் என்ற கேள்விக்கும் பதில் அளித்தார். வேத வசனங்கள் தேவனிடத்திலிருந்து வந்த வார்த்தை, தீர்க்கதரிசிகளின் கற்பனைகள் அல்ல. "விவரித்துச் சொல்லுதல்" என்று தற்போது விவாதித்துக் கொண்டிருக்கும் காரியம் தீர்க்கதரிசி வசனத்தை பதிவு பண்ணும் போது கொடுப்பது, வாசகர் அதன் பொருள் என்ன என்று கேட்கும் போது கொடுக்கப்படுவதல்ல.

பின்னதான விளக்கவுரைகள் கீழ்நிலையிலிருந்து மேல்நிலை வரைக்குமுள்ள சமய குருமார்கள் என்று தங்களை அழைத்துக்

கொள்வோரால் நடத்தப்படும் சபைகளில் ஏற்றுக்கொள்ளப்பட்டன. என்பதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. அவர்களின் தர்க்கம் என்னவெனில், சபைகள் உலகிற்கு திருமறையைக் கொடுத்தது எனவே சபை தான் அதை விளக்கப்படுத்தவும் தகுதியானது என்பதுதான். தனிப்பட்டோரின் சுய விளக்கங்களெல்லாம் மிகவும் ஆபத்தானவை. KJV மொழிபெயர்ப்பு இந்த புரிந்து கொள்ளுதலுக்கு அர்ப்பணித்து இந்த வசனப் பகுதியை இப்படியாக வாசிக்கச் செய்துள்ளது, "வேதத்திலுள்ள எந்த தீர்க்கதரிசனமும் தனிப்பட்ட விளக்கமுடையதாயிராது." அந்த மொழிபெயர்ப்பு மிகச் சிறப்பானதாயிராவிட்டாலும், அதிலிருந்து ஒரு முக்கியமான கருத்து எடுத்துக்கொள்ளப்படக் கூடும். ஒரு சமுதாயத்தின் விளக்கம் மற்றவர்களுடன் கொடுக்கும் போது திருமறையின் பொருளை சுய பிரதிபலிப்புக்கு தெரிந்து கொள்வதாகும்.

ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஆசாரியனானபடியால், *(1 பேதுரு 2:5; வெளிப்படுத்தின விசேஷம் 1:6)*, ஒவ்வொருவரும் வேத வசனங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ள செய்தியை வாசித்து, விளக்கம் கொடுத்து, போதிக்கிற பொறுப்பை பெற்றுக் கொள்ள வேண்டும், ஆகிலும், ஒரு தனிநபர் வேத வசனங்களுக்குத் தான் கொடுத்த விளக்கம் சபையின் சரியென ஏற்றுக் கொள்ளும் நபர்களால் நிராகரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டால், அவர் தனது விளக்கமளிக்குமுறையில் தான் மட்டும் தனித்திருப்பதை உணரும் போது, அவர் ஆவிக்குரிய முதிர்ச்சி பெற்ற விசுவாசிகளின் அறிவுரைக்கு செவி சாய்ப்பது அவசியம். அவர் தனது விளக்கத்தை மறுமதிப்பீடு செய்து மற்றவர்களிடமிருந்து தான் பெற்ற உபதேசங்களை அடிப்படையாகக் கொண்டு சரிபண்ணிக் கொள்ள வேண்டும்.

***வசனம் 21.*** இன்னமும் தவறாகப் புரிந்து கொள்ள சந்தர்ப்பம் இருப்பதால், அப்போஸ்தலன் மறுபடியும் விளக்கம் கொடுக்கிறார். தனது வாசகர்கள் எது தீர்க்கதரிசனமல்ல என்று அறிந்து கொள்ளும்படி விரும்பினார்; பிறகு அது என்ன என்று அறிந்து கொள்ள வேண்டுமென்று விரும்பினார். ***தீர்க்கதரிசனமானது ஒருக்காலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டு பேசினார்கள்.*** இந்த இடத்திலே, வசனத்தை விளக்கப்படுத்துவது பேதுருவை சிந்திக்க வைக்க வில்லை, மாறாக அதின் ஆரம்பமே. பேதுரு உறுதிப்படுத்த பயன்படுத்தியவைகள் எல்லாம் வெகு தொலைவில் (எட்டாக்கையாக) இருந்தன, அவைகளில் எந்த ஒன்றையும் விசாலமாக பரிசீலிக்க இடம் போதாதாகையால், ஒன்றிரண்டு கருத்துக்களை மட்டும் சிரமமாக ஆலோசிப்போம். முதலாவதாக, நாம் ஏற்கனவே பார்த்தபடி, "தீர்க்கதரிசனம்" பற்றி முதலில் ஆய்வு செய்வோம், அது முற்றிலும் பழைய ஏற்பாட்டிற்குரியது. அதே அமைப்பின் கீழ் புதிய ஏற்பாட்டை வைத்துப் பார்க்க வேண்டுமானால் சில அதிகப்படியான மதிப்பீட்டுக்கருத்துக்களை அலச வேண்டும், இருந்தாலும், அப்படிப்பட்ட அதிகப்படியான மதிப்பீட்டுக் கருத்துக்கள் எல்லைக் கோட்டுக்கு அப்பாற்பட்டது அல்ல. பவுலும் புதிய ஏற்பாட்டிற்கு அதிகமாய் செயலூக்கம் கொடுத்தவர்களும் தாங்களும் பரிசுத்த ஆவியினால் வழிநடத்தப்பட்டதாக எண்ணங்கொண்டிருந்தனர் *(1 கொரிந்தியர் 2:13; 1 தெசலோனிக்கேயர் 1:5).*

இரண்டாவதாக, திருமறை “தேவனிடத்திலிருந்து பேசின” மனுஷர்கள் “பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு,” அதன் விளைவாக திருமறை வந்ததால்வசனம் நம்பத்தகுந்தது என பின்பற்றப்பட்டது. திருமறையின் ஆசிரியர்கள் எளிய மொழிகளைப் பயன்படுத்திய நிலையில் தங்கள் செய்திகளைச் கொடுக்க விழைந்த போது, வேத வசனங்கள் வரலாற்று நடவடிக்கைகளிலிருந்து தவறானவைகளை முன்வைக்கவில்லை, மத உபதேசக் கோட்பாடுகளையோ, அல்லது ஒழுக்க சம்பந்தப்பட்ட கண்டிப்புக்களையோ முன் வைக்கவில்லை, இப்படிச் சொல்லப்பட்டிருப்பதால், “தவறானவைகள்” என்ற வார்த்தையைக் குறித்து தீர்மானிப்பதில் ஒரு பெரியகாரியமே எஞ்சி நிற்கிறது. திருமறையை நகல் எடுப்பதிலும் மாற்றிக் கொடுப்பதிலும் பரிசுத்த ஆவியானவர் தவறுகளிலிருந்து பாதுகாத்தார் என்பதற்கான சாட்சியம் எதுவுமில்லை. சாட்சியமெல்லாம் அதற்கு முரண்பட்டவைகளுக்கே. நாம் சாத்தியக்கூறுகளுக்கு அனுமதிக்க வேண்டும். சில நேரங்களில் உண்மைக்கும் அனுமதிக்க வேண்டும், மாற்றிக் கொடுக்கிற விஷயத்தில் தான் தவறுகள் செய்யப்பட்டுள்ளன.

மேலும், மொழிபெயர்ப்பு என்பது தவறே செய்யப்படாதது என்று பொருளல்ல. அப்படியிருந்தால், திருமறைக்கு பல மொழிபெயர்ப்புகள் நமக்குத் தேவையில்லை. ஏவப்பட்ட ஒரு மொழிபெயர்ப்பே நமக்குப் போதுமானதாக இருந்திருக்கக் கூடும். மூலப் பாஷையிலிருந்து மொழிபெயர்ப்பாளர்கள் மொழிபெயர்க்கவோ விளக்கமளிக்கவோ அழைக்கப்படும்போது, தங்கள் சிறந்த விவேகத்தைப் பயன்படுத்த எதிர்பார்க்கப்பட்டனர். மொழிபெயர்ப்புகளில் தவறுகள் ஏற்பட நாம் அனுமதிக்க வேண்டும். இது கவலையளிக்கக் கூடியதாக இருந்தாலும், விசேஷமாக இதை முதல் முறையாக சந்திக்கிறபோது, ஆயிரக்கணக்கான திருமறை மூலப்பிரதிகள் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளது என்ற உணர்வே நமக்கு ஆறுதல் அளிக்கக் கூடும். அந்த மூலப் பிரதிகளை தீர்க்கமாய் ஆராயவும் மதிப்பீடு செய்யவும் எங்கே தவறு காணுகிறது என தங்கள் வாழ்நாளையே செலவிட்ட வல்லுனர்களுக்கு நாம் கடன்பட்டிருக்கிறோம். மொழிபெயர்ப்புகளெல்லாம் மூலப்பாஷை பிரதிகளைப் போல ஏவப்பட்டவைகளல்ல என்கிற ரீதியில், மிக அதிகமான கூர்ந்த கவனம் செலுத்தி ஆங்கில வேதாகமத்தை மொழிபெயர்த்திருக்கிறார்கள் என்பதிலே நாம் நம்பிக்கையாயும் இருக்க முடியும். நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும், கூடவே ஒரு ஜனக் கூட்டத்தை அழைத்து தமது நாமத்தைத் தரித்துக் கொள்ளச் செய்து ஜீவ வழியை அவர்களுக்குப் போதித்த அந்த செய்தியைப் பெற நமக்கு வாய்ப்பளிக்கப்பட்டிருக்கிறது என்ற நம்பிக்கையும் நமக்கிருக்கிறது.

## பயன்பாடு

### தேவனுடைய அன்பு (1:3)

மிக அடிப்படையான கிறிஸ்தவ உபதேசங்களில் ஒருவேளை எளிமையான உரிமை கோரிக்கை “தேவன் அன்பாயிருக்கிறார்” என்பதுதான், அது, காலத்துக்குக் காலம் கடினமாக சோதிக்கப்பட்ட ஒரு அறிக்கை.

ஒரு வாலிபப் பெண் ஒன்பது மாதம் கர்ப்பஞ் சுமந்து தனது முதற்பேறான

*குழந்தையைக் காண ஆசையோடு காத்திருக்கிறாள், பிறகு, குழந்தை பிறக்கிறது, அவர்கள் செய்தியை அவளுக்குச் சொல்லுகிறார்கள். குழந்தைக்கு மூளை வளர்ச்சி குறைவு இருக்கிறது, அந்த இளம் தாய் உங்களைப் பார்த்து கேட்கிறாள், "தேவன் என்னை அன்புகூருகிறாரா? அவர் இந்த குழந்தையினிடத்தில் அன்புகூருகிறாரா? இப்படி நடக்க அனுமதித்துள்ள அவர் எப்படி அன்பின் தேவனாவார்?" தேவன் அன்பாயிருக்கிறார் என்று இலேசாக அறிக்கையிடுவது கூட கஷ்டம். மிக அதிகமான பாடுகள் உண்டு. எல்லா வகையான காட்சிகளையும் கண்ணுறும்போது, சில வேளைகளில் ஏதுமறியா ஜனங்கள் எந்தக் குற்றமும் செய்யாமலேயே பாடுபடுகின்றனர். தேவன் தமது ஜனங்களை அன்புகூர்ந்தால், அவர் சகல வல்லமையும் பெற்றவராயிருந்தால், கபடுசூது இல்லாதவர்கள் ஏன் பாடுபட அனுமதிக்க வேண்டும்?*

*பேதுருவின் பதில், என்னவென்றால் "ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினார்" என்று உறுதிப்படுத்துகிறார் (1:3). இதிலிருந்து தேவன் உலகத்தின் பாவங்கள் மற்றும் தீமைகள் மூலம் கிரியை செய்து தமது நோக்கங்களை நிறைவேற்றுகிறார் என்பதை இது காட்டுகிறது. கிறிஸ்தவர்கள் நசரேயனாகிய இயேசுவோடு கூட தங்கள் சீட்டுக்களைப் போடும் போது, ஜீவனுக்கும் தேவபக்திக்குமுரிய பகுதியில் நிற்கின்றனர். உலகத்தின் மீது ஆளுகை செய்வது தேவனுடைய பகுதி. அவரிடத்தில் அன்புகூர்ந்து முழு நம்பிக்கையை அவர் மீது வைப்பது சிருஷ்டியின் பகுதி. நாம் அவருடைய சகல வழிகளையும் அறிந்தவர்களல்ல என அறிக்கையிட வேண்டும். நம்மை நாம் அவருடைய பராமரிப்பில் போதுமான அளவுக்கு ஒப்புக் கொடுக்க வேண்டிய அளவு அறிந்திருக்கிறோம். இயேசு கிறிஸ்து மூலமாய் பாவத்திலிருந்து நாம் இரட்சிக்கப்படுவதற்கும் நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்வதற்கும் போதிய அளவு அவரை அறிந்திருக்கிறோம்.*

## *அதற்கான ஒரு வார்த்தையைக் கொண்டுள்ளோம் (1:5-8)*

*பேதுரு குறிப்பிடும் கிறிஸ்தவ நல்லொழுக்கங்களின் பட்டியலில் கலாத்தியர் 5:22, 23ல் குறிப்பிடப்படும் ஆவியின் கனியோடு அநேக கருத்துக்கள் தொடர்புடையவைகளாயிருக்கின்றன. பேதுரு மற்றும் பவுல், ஆகிய இருவருமே, அவர்கள் பட்டியலிட்ட குணாதிசயங்களை ஒரு விதத்தில் "கனிகள்" என்றே விளங்கிக் கொண்டிருந்தனர். பேதுரு சொன்ன கிறிஸ்தவ தகுதியாம்ஸங்கள் அவர்களை "கனியற்றவர்களாயிருக்க வொட்டாது" என்று அவர் குறிப்பிட்டார். இந்த வார்த்தைகள் நாம் சிந்திப்பதற்கும் ஒரு கிறிஸ்தவன் வாழ வேண்டிய முறைப்படி வாழ்வதற்கு உரிய பதத்தைக் கொடுக்கின்றன. நாம் பெயரிடமுடியாத கருத்துக்களைக் குறித்து சிந்திக்கவே சிரமப்படுகிறோம்.*

*அநுபவம் நம்முடைய சொற்தொகுதியை வடிவமைத்து நம்முடைய சிந்தையை சீர்திருத்துகிறது. உதாரணமாக, பனி எனும் வார்த்தைக்கு எஸ்கிமோக்கள் அநேக பதங்களைக் கொண்டுள்ளனர். ஒரு வெப்பமண்டலக் கோடுகளுக்கிடையே உலாவும் நபருக்கு எந்த வார்த்தையுமில்லை, ஏனெனில் அதற்கு அவர் வித்தியாசப்பட்ட பெயர்களைக் கொண்டுள்ளார். பனி என்பதற்கு ஒரு எஸ்கிமோ வித்தியாசப்பட்ட பனிகளைக் காண்கிறார், அது*

வெப்ப மண்டல வாசிக்கு எந்த அர்த்தத்தையும் கொடுப்பதில்லை, ஒருவேளை அவர் பனிமண்டலப்பகுதிக்குப் போனாலும் அவருக்கு எவ்வித அர்த்தத்தையும் அது கொடுக்காது. எஸ்கிமோவின் வார்த்தைகளில்லாமல் வெப்பமண்டல வாசி பனி குறித்து வித்தியாசங்களை அறிய முடியாது.

அதேபோல, தேவனோடுள்ள அநுபவம், அவர் தாம் யாரென்றும் தமது ஜனங்கள் கொண்டிருக்க வேண்டிய வாழ்க்கையின் விதம் குறித்தும் அவரது விருப்பத்தை நாம் புரிந்து கொள்ள ஏதுவான பெயர்களையும் வார்த்தைகளையும் கொடுக்கின்றன. ஒழுக்க உணர்வுகள் ஒருபுறம் "இச்சையடக்கத்திற்கும்" மறுபுறம் "தேவபக்திக்கும்" இடையேயான வித்தியாசத்தை மிக நுட்பமாகக் கொண்டுள்ளது. "சகோதர சிநேகம்" என்பது பொதுவான "அன்பு" என்கிற ஒழுக்கத்துடன் சமமான பொருளையுடையதல்ல. நல்லொழுக்கங்களை பெயரிட்டு அவைகளைப் பற்றிக் கொள்ள தமது ஜனங்கள் செயல்பட வேண்டும் என விரும்பி தேவன் அவைகளை அடையாளப்படுத்திக்கொள்ள வழியையும், அவைகளை சிந்திக்கச் செய்யவும், வாழ்க்கையின் முன்மாதிரியாகக் கொள்ளவும் கொடுத்திருக்கிறார்.

## உங்கள் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள் (1:8-11)

ஒரு கிறிஸ்தவன் தனது ஜீவியத்தில் பேதுரு வரிசைப்படுத்தின நல்லொழுக்கங்களைத் தாராளமாய் கொண்டிருந்தால், அவைகளை அவன் கைக் கொண்டிருந்தால், கிறிஸ்துவின் ஞானம் இயல்பாக உருவாகும். ஒருவரும் கனியற்றவராயிருக்க முடியாது. அவர் கிறிஸ்தவ கிருபைகளைத் தன் வாழ்க்கையில் சேர்த்துக் கொள்கிறார் ஆதலால் அறிவில் மலட்டுத்தன்மை அவரிடத்தில் (ஆவிக்குரிய ரீதியில்) இருக்காது. பேதுரு பேசும் ஞானம் எழுத்துவடிவத்திலல்ல, நடைமுறை ஞானத்தைப் பேசுகிறார். இரண்டும் ஒன்றல்ல. உதாரணமாக, ஒருவர் உடற்பயிற்சி சம்பந்தப்பட்ட பாடங்களை வாசிக்கலாம், ஆகிலும் ஆண்டுக்கணக்கில் அவர் அதைப்பற்றிய பயிற்சி *அறிவை மட்டுமே* கொண்டிருப்பார். பேதுரு எதிர்கொண்ட கள்ளப் போதகர்கள் அப்போஸ்தலர்களுக்கே தெரியாத காரியங்களை தாங்கள் அறிந்திருப்பதாகச் சொல்லிக் கொண்டார்கள். அவர்களைப் பொறுத்த மட்டில் ஞானம் என்பது அவர்கள் கற்ற அளவு மட்டுமே உட்படுத்தப்பட்ட ஒன்று, அவர்கள் பகிர்ந்து கொள்ள இயலாத இரகசியம். பேதுருவைப் பொறுத்த மட்டிலோ, ஞானமும் தேவபக்தியும் பிரிக்க இயலாதவை.

ஞானம் என்பது கோட்பாட்டிற்குரியதல்ல. அது ஒருவர் தாம் வாழ்கிற வழிமுறையில் உணரப்படுவது. உதாரணமாக ஒருவர் நீடிய பொறுமையைக் குறித்து வாசிக்கலாம், ஆகிலும் அவர் நீடிய பொறுமையுடன் இருக்கும் போதுதான் நீடிய பொறுமை என்ன என்றும் நீடிய பொறுமைக்கான தன்னுடைய திராணி என்ன என்றும் *அறிந்து கொள்கிறார்*. அதே போல, அவர் இச்சையடக்கம் பற்றியும் அவர் இச்சையடக்கத்தை செயல்படுத்தும்போது தான் அறிந்து கொள்கிறார். பொறுமையுடனான விடாமுயற்சியும், சுயக்கட்டுப்பாடான இச்சையடக்கமும், வேறே கிறிஸ்தவ கிருபைகளும் கிறிஸ்துவை அறிகிற அறிவுக்கு அப்பாற்பட்டவையல்ல. செய்தல் அறிதலைப் பிறப்பிக்கிறது. "இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து பெருகினால்," என்று

சொன்ன அப்போஸ்தலன் தனது வாசகர்களுக்கு உறுதியளித்து, "... நம்முடைய கர்த்தராகிய இயேசுவை அறிகிற அறிவிலே பிரயோஜனமுள்ளவர்களும் கனியுள்ளவர்களாயும்" இருக்கக் செய்யும் என்றும் சொன்னார். மற்றொரு புறம், கிறிஸ்துவை அறிக்கை செய்தும் இந்த நடைமுறையிலுள்ள கிறிஸ்தவ உபதேசத்தை அறியத்தவறுவானானால் அவன் முன் செய்த பாவங்களிலிருந்து தான் சுத்திகரிக்கப்பட்டதை மறந்து கண்சொருகிப்போன குருடனாயிருக்கிறான் (அதாவது அவன் எதையும் அறிந்து கொள்ளவில்லை).

## சத்தியத்தில் உறுதிப்பட்டிருத்தல் (1:12-18)

"சத்தியம்" என்பது முற்றிலுமாக புரிந்து கொள்ள இயலாத ஒன்று. அது வேதாகமத்தில் ஒரு பெரிய வார்த்தையாக இருக்கிறது. இயேசு "சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" என்று சொன்னார் (யோவான் 8:32). இயேசுவின் விசாரணையின் போது, "சத்தியமாவது என்ன?" என்று பிலாத்து கேட்டான். (யோவான் 18:38). பிலாத்துவைப் போலன்றி, ஜனங்கள் சத்தியத்தை அறிந்து கொள்ளத் தக்க வகையில் துவங்கி திருமறை முடிவு பெறுகிறது.

நம்முடைய ஜனங்களில் அநேகரும் ஒருவர் குறிப்பிட விரும்புகிற எதைக் குறித்தும் தங்களுக்கு உண்மை தெரியும் என்பதுபோல காணுகிறது, காலை உணவாக நெல் அல்லது கோதுமையிலிருந்து செய்யப்பட்ட உணவு வகை குறித்தும், இந்தியாவின் தட்ப வெப்பநிலை குறித்தும், ஒழுக்க ரீதியான எல்லாக் காரியங்களிலும், அவர்களுக்குப் பதில் தெரியும், ஆகிலும், நிச்சயமாக பதில் தெரியாமலிருப்பவர்களையும் நான் அறிவேன். நம்முடைய இந்த உலகத்தின் மக்கள், அனைவருமே, நம்முடைய முற்பிதாக்களைக் காட்டிலும் எவ்வளவோ உண்மைகளை எதைக் குறித்தும் குறைவாகவே அறிந்து கொள்ளச் செய்யப்பட்டுள்ளனர்.

அப்போஸ்தலனாகிய பேதுரு தனது 2 பேதுரு புத்தகத்தில் குறிப்பிட்ட கிறிஸ்தவர்களிடம், அவர்கள் சத்தியத்தை அறிந்து கொள்ள முடியும் என்று உறுதியளித்தார். அவருடைய வார்த்தைகள் முக்கியமானவைகளை உட்படுத்துகின்றன.

(1) *சத்தியத்தை உண்மையாய்த்தேடுவோர் அதைக் கண்டடைவார்கள்.* அவசியமான சத்தியங்களை அறிந்து கொண்டு நாம் நம்பிக்கை பெற சகல சத்தியத்தையும் அறிய வேண்டும் என்ற கட்டாயமில்லை. அப்போஸ்தலன் எழுதியதாவது. "இதனிமித்தம், இவைகளை நீங்கள் அறிந்தும், நீங்கள் இப்பொழுது அறிந்திருக்கிற சத்தியத்தில் உறுதிப்பட்டிருந்தும், உங்களுக்கு இவைகளை எப்பொழுதும் நினைப்பூட்ட நான் அசதியாயிரேன்" (2 பேதுரு 1:12).

பேதுருவும் மற்றவர்களும் இயேசுவோடு இருக்கையில் அவர்கள் கேட்டவைகளையும் பார்த்தவைகளையும் குறித்து உலகத்திற்குச் சொன்னார்கள். அவர் ஒரு பிறவிக்குருடனைத் தொட்டு குணமாக்கியதை அவர்கள் பார்த்தார்கள். அவர் காற்றை அமர்த்திய போதும் அற்புதமாக ஐந்தாயிரம் பேரைப் போஷித்த போதும் அவர்கள் அங்கே இருந்தார்கள். மறுரூப மலையில் தேவனிடத்திலிருந்து ஒரு சத்தமுண்டாகி இயேசுவே கர்த்தர் என்று சாட்சியளித்த போது அவர்கள் அவரோடிருந்தார்கள்.

பேதுருவும் நடந்தவைகளை விவரித்து சாட்சியமாக, "இவர் என்னுடைய நேசகுமாரன், இவரிடத்தில் பிரியமாயிருக்கிறேன் என்று சொல்லுகிற சத்தம் உன்னதமான மகிமையிலிருந்து அவருக்கு உண்டாகி, பிதாவாகிய தேவனாலே அவர் கனத்தையும் மகிமையும் பெற்றபோது, ... வானத்திலிருந்து பிறந்த அந்த சத்தத்தைக் கேட்டோம்," என்று சொன்னார் (2 பேதுரு 1:17, 18).

பேதுரு சொன்னவைகளைக் கேட்ட சிலர் "தந்திரமான கட்டுக்கதைகளை" அவர் பேசினதாகச் சொன்னார்கள், அப்போஸ்தலன் அதை மறுத்தார். பேதுரு இதைச் சொன்னவிதம் இப்படியாக இருக்கலாம்: "நாங்கள் சொல்லிக் கொண்டிருப்பது அஞ்ஞானிகளின் கட்டுக்கதைகளைப் போன்றவையல்ல. நாங்கள் அங்கே இருந்தோம். இவைகள் நடந்தன, நாங்கள் உண்மையை (சத்தியத்தைப்) பேசுகிறோம்." நம்மிலே எல்லாருமே எல்லாவற்றையும் குறித்த உண்மையை (சத்தியத்தை) அறிந்திருக்க இயலாது. தேவனைக் குறித்த சகல உண்மைகளையும் நாம் அறிந்து கொண்டிருக்க இயலாது. ஆனாலும், சில காரியங்களை நாம் ஆணியடித்தாற்போல் சத்தியமாக உறுதிப்படுத்தக் கூடும். திருமறை தேவனுடைய வசனம். அதுவே சத்தியம். நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவாக இருந்தார், இருக்கிறார். அதுவே சத்தியம். சத்தியம் (உண்மை) என்னவென்றால் தேவன் பரலோகத்தில் வாசம் பண்ணுதலை விட்டு வந்தார், நசரேயனாகிய இயேசு மனுஷர்களுக்குள்ளே வாழ்ந்து அவர்களை மீட்டார்.

(2) *சத்தியம் விசுவாசிக்கப்படுவதோடு மாத்திரமல்ல, அதற்கு கீழ்ப்படியப்படவும் வேண்டும்.* நாம் இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டுமென நாம் அறிந்து கொள்ள முடியும். நாம் எப்படிப்பட்ட வாழ்க்கையை நடத்த வேண்டுமென தேவன் விரும்புகிறார் என்பதையும் நாம் அறிந்து கொள்ள முடியும். சத்தியம் மனதோடு புரிந்து கொள்ளப்பட வேண்டிய ஒன்று, ஆனால் சத்தியமானது எழுத்து வடிவில் இருப்பதைக் காட்டிலும் மேலானது. ஜனங்கள் அவைகளை செயல் வடிவில் வாழ்ந்து காட்ட வேண்டியவர்கள் பவுல் எழுதியதாவது,

> தேவன் அவனவனுடைய கிரியைகளுக்குத் தக்கதாய் அவனவனுக்குப் பலனளிப்பார். சோர்ந்து போகாமல் நற்கிரியைகளைச் செய்து, மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்திய ஜீவனை அளிப்பார்; சண்டைக்காரராயிருந்து, சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமல், அநியாயத்திற்குக் கீழ்ப்படிந்திருக்கிறவர்களுக்கோ உக்கிர கோபாக்கினை வரும் (ரோமர் 2:6-8).

இன்னொரு இடத்தில் இதே அப்போஸ்தலன் தொடர்ந்து, "நீங்கள் நன்றாய் ஓடினீர்களே; சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமற் போக உங்களுக்குத் தடைசெய்தவன் யார்?" என்பதையும் சேர்த்துக் கொண்டார் (கலாத்தியர் 5:7). சத்தியம் என்பது அறிக்கையிட்டுவிட்டு பின்பு கண்டு கொள்ளப்படாமல் போவதல்ல. சத்தியங்கள் தழுவிக் கொள்ளப்பட வேண்டும்.

பேதுரு தான் எழுதியதற்கான நோக்கங்களில் ஒன்றாக தனது வாசகர்களை, தேவன் தனக்கு வெளிப்படுத்தியவைகளை நினைப்பூட்டும்படியாகத்தான். என்பதைத் தெளிவாக்கினார். அவர் கடந்த நாட்களில் சத்தியத்தை பிரசங்கித்திருந்தார். இப்பொழுது அவைகளை மறுஅழுத்தம் கொடுத்து அவர்களுடைய மனதிலே நினைப்பூட்ட விரும்புகிறார். "இந்தக் கூடாரத்தில்

நான் இருக்குமளவும் உங்களை நினைப்பூட்டி எழுப்பி விடுவது நியாயமெ ன்று எண்ணுகிறேன்" (2 பேதுரு 1:14). பின்னர் தொடர்ந்து அவர், "பிரியமானவர்களே, இந்த இரண்டாம் நிருபத்தை இப்பொழுது உங்களுக்கு எழுதுகிறேன், ... இந்த நிருபங்களினால் உங்கள் உண்மையான மனதை நினைப்பூட்டி எழுப்புகிறேன்" என்று எழுதுவார் (2 பேதுரு 3:1, 2).

அந்திய நாடுகளிலே ஒரு கோட்பாடு பரவிக் கொண்டுள்ளது, அது சபை புதிய காரியங்களை நடப்பித்து ஜனங்களை பரவசப்படுத்தி ஆர்வமுடையவர் களாகச் செய்ய வேண்டும் என்பதுதான். அத்தேனேயர்களைப் போல சிலர் நவமான காரியங்களைச் சொல்லுகிறதிலும் கேட்கிறதிலுமேயொழிய வேறொன்றிலும் பொழுது போக்குகிறதில்லை, என்பது உண்மையே (நடபடிகள் 17:21). புதிய காரியங்கள் மனதைக் கவரும் தன்மையுடையது, ஆனாலும் ஜனங்கள் எந்த விஷயத்திலும் அதிக காலம் தொடர் மாற்றங்களை நாடி பசியுள்ளவர்களாயிருப்பின் ஒருபோதும் திருப்தியடையப்போகிறதில்லை. தேவனுடைய ஜனங்கள் ஆர்வமடைய வேண்டும் என்பதற்காக அவர்களுடைய அன்றாட கைக்கொள்ளும் செயல்களோ போதனைகளோ நவமானவை (புதியவை)களாக இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. ஒருவரது நம்பிக்கைக்கும் பயபக்திக்கும் நேரடி தொடர்பு ஏற்பட பழைய செய்திகள் ஆர்வமளிக்காமலில்லை. எனக்கு ஒரு பழைய நண்பருண்டு. அவரோடு நான் ஒரே பள்ளியில் பயின்று வளர்ந்தோம். நாங்கள் ஒன்றாகச் சந்திக்கும் போது, இரட்டிப்பாக நண்பர்களை ஓரிடத்தில் சந்திக்கச் செய்து எல்லா வாலிபரும் செய்யும் மதியீனமான காரியங்களைக் செய்வது வழக்கம். நாங்கள் சந்திக்கும் போதெல்லாம் அவைகளைக் குறித்துப் பேசுவோம். அவைகளெல்லாம் நாங்கள் பகிர்ந்து கொண்ட வரலாற்றுப் பகுதிகளாகும். நாங்கள் பொதுவாக அனுபவித்த அநுபவங்களெல்லாம் எங்களுக்குச் சலிப்பாகத் தோன்ற வில்லை. நாங்கள் ஒன்றாக நேரத்தை அனுபவிப்பதற்காக ஏதோ புதிய காரியங்கள் எங்களுக்குத் தேவையில்லை.

கிறிஸ்தவர்கள் கூடி பகிர்ந்து கொள்ளும் ஒரு குடும்பமாக இருக்கிறார்கள். ஆபிரகாம் விசுவாசிகளின் தகப்பனாவார், மோசே இஸ்ரவேலருக்கு நியாயப்பிரமாணத்தை அளித்தவர். தாவீது அவர்களுடைய ராஜாவாக இருந்தார்; ஏசாயாவும் எரேமியாவும் அவர்களுக்கு தீர்க்கதரிசிகளாயிருந்தனர். ஒட்டு மொத்தக் கூற்றாக இயேசுவே கர்த்தர் என்ற வரலாறு சத்தியமாகும். கிறிஸ்தவர்கள் கூடிவரும் போது அவர்கள் காலத்தினூடே நடந்த அநுபவங்களை பகிர்ந்து கொண்டவைப் பற்றிப் பேசுவார்கள். அவர்களுடைய முன்னோர்களின் அனுபவம் அவர்களுக்குத் தார்க்கோல் போன்று அவர்களை விசுவாசத்துடன் நிலைத்திருக்க ஏவுகிறது. இயேசுவைக் குறித்த பதிவேடுகளும் பவுலின் பிரசங்கங்களும் தேவன் எப்படி விசுவாசிகளை இரட்சித்தார் என்று சொல்லுகின்றன. இயேசு மறுபடியும் வருவாரென அவர்கள் உறுதியான நம்பிக்கையோடே எதிர்பார்த்துக் கொண்டுள்ளனர். பிரசங்கியார்கள் ஜனங்களின் கவனத்தைத் திருப்பவும் ஈர்க்கவும் அவர்களுடைய மனதைத் தொடும் வகையில் யுக்திகளை கையாண்டு சில நூதனமான காரியங்களை செயல்படுத்துவதில் இறங்கும் பழக்கத்தில் விழக்கூடும். புதிய காரியங்கள் விரைவில் பழையவைகளாகின்றன: ஆகிலும்

நம்முடைய பொதுவான வரலாறு ஒருபோதும் பழையவைகளாவதில்லை. நாம் யாரென்று அவைகள் சொல்லுகின்றன. கிறிஸ்தவ உபதேசமும் கிறிஸ்தவ வாழ்க்கையும் சத்தியத்தில் வேரூன்றியுள்ளது.

(3) *சத்தியம் தேவனுடைய ஜனங்களை மரணத்தைச் சந்திக்கவும் வருகிற மறுமைக்கும் அவர்களை ஆயத்தப்படுத்துகிறது.* கர்த்தர் சொன்னதை பேதுரு நினைவுபடுத்திக் கொண்டார். சத்தியத்தினாலும் நினைவுகளாலும் தன்னை மூடிக் கொண்டு, ஆறுதலாலும் நிச்சயமானவைகளாலும் சூழப்பட்ட அப்போஸ்தலன் அவருடைய மரணத்தின் வருகையைக் குறித்துப் பேசினார், அவர், "... நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து எனக்கு அறிவித்தபடி நான் என் கூடாரத்தை விட்டுப் போவது சீக்கிரத்தில் நேரிடுமென்று அறிந்து ..." (2 பேதுரு 1:13), என்று குறிப்பிட்டார்.

யோவான் 21ல் பதிவு செய்யப்பட்டுள்ள நிகழ்ச்சியை அநேகமாக அப்போஸ்தலன் இங்கே குறிப்பிடுகிறார். இயேசு சிலுவையில் அறையப்பட்டிருந்தார். பேதுருவும் மற்றவர்களும் மீண்டும் கலியே யாக்கடலுக்குப் போய்த் தங்கள் மீன் பிடித்தொழிலை மேற்கொண்டனர். இயேசு அவர்களுக்குத் தோன்றி, அவர்களை உற்சாகப்படுத்தினார். அவர் தனிப்பட்டமுறையில் பேதுருவிடம் வரப்போகிற அவனுடைய மரணத்தைக் குறித்து பேசினார். யோவான் 21:18, 19 சொல்கிறது,

> நீ இளவயதுள்ளவனாயிருந்தபோது உன்னை நீயே அரைகட்டிக்கொண்டு, உனக்கு நீயே அரைகட்டிக்கொண்டு, உனக்கு இஷ்டமான இடங்களிலே நடந்து திரிந்தாய்; நீ முதிர்வயதுள்ளவனாகும் போது உன் கைகளை நீட்டுவாய்; வேறொருவன் உன் அரையைக் கட்டி, உனக்கு இஷ்டமில்லாத இடத்துக்கு உன்னைக் கொண்டுபோவான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார். இன்னவிதமான மரணத்தினாலே அவன் தேவனை மகிமைப்படுத்தப்போகிறானென்பதைக் குறிக்கும்படியாக என்று இப்படிச் சொன்னார் (யோவான் 21:18, 19).

அமெரிக்க வாழ்க்கையில் விலக்கப்பட்ட பொருளாக மரணம் என்பது பாலுறவை இடம் மாற்றியிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அது உண்மையாகவே காணப்படுகிறது. துவக்கப்பள்ளியில் பாலுறவு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது, ஆனால் மரணம் எங்கும் நினைவுகூரப்படுவதில்லை. மரண சடங்குகள் எவ்வளவு மாறிவிட்டன என்பது ஆச்சரியமாக இருக்கிறது. எழுபத்தைந்து வருடங்களுக்கு முன்பு, ஒருவர் மரித்துப் போனால் அவரது உடல் வீட்டில் ஐந்து முதல் எழு நாட்கள் வரை பாதுகாத்து வைக்கப்படும், அயலார்கள் வந்து விழித்திருந்து உதவுவார்கள். சவ அடக்கத்தின்போது பார்வையாளர்களின் வருகை இப்பொழுது மாற்றம் பெற்றுள்ளது, மரித்தவரை அடக்கம் செய்யும் வீட்டில் சில நாட்கள் வைக்கப்பட்டிருக்கும், பார்வையிடும் நாட்கள் இப்பொழுது குறைக்கப்பட்டுள்ளது. இன்று ஒரு நாளுக்கு மேல் குடும்பத்தாரை சந்தித்து ஆறுதல்படுத்துவதே அபூர்வமாயிருக்கிறது, பெரும்பாலும் அதுவும் நடப்பதில்லை. அடக்கம் செய்யும் ஒழுங்குகளும் மாற்றப்பட்டுள்ளது. பிரேதம் சிதைவைக்கப்படுவது பொதுவான பழக்கமாகி விட்டது. துக்க

*நிவர்த்தி நாள் பெரும்பாலும், ஒரு "கேலிக்கூத்தாகிப்" போனது, ஒரு இறுக்கமான பிரதிபலிப்பு அங்கே காணுவதில்லை. மரணத்தைக் குறித்து இவைகள் சொல்லுவது என்ன என்பதை ஒருவர் சுலபமாக ஆச்சரியப்பட மட்டுமே முடியும். ஒருவர் மரிக்கும் போது, எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரமாய் அவரை அப்புறப்படுத்தவே விரும்புவார்கள், மரணத்துடன் நாம் எந்தக் காரியத்தையும் கொண்டிருக்க விரும்புவதில்லை. பேதுரு தனது வாசகர்களை மரணத்தைக் குறித்து உண்மையை அறிந்து கொள்ள அறைகூவல் விடுக்கிறார்.*

*பேதுரு தனது பிரிவைக்குறித்து எவ்வித வருத்தமுமில்லாமல் பேசுவதாக தோன்றுகிறது, நிச்சயமாக அவர் பயப்படவில்லை. மரணம் என்பது அன்றாட ஒழுங்குமுறைச் செயல்களில் இயல்பான ஒன்று. தேவன் நம்மை படைத்தவிதமே இதுதான், ஜீவராசிகளில் ஜனங்கள் மட்டுமே மரிப்பவர்களல்ல, நாய்கள் ஆடுகள் மற்றும் மான்கள் - ஆகிய அனைத்தும் சாகிறவைகள்தான். மனித மனதை உறுத்திக்கொண்டுள்ள கேள்வி என்னவெனில் மனிதனுடைய மரணமும் ஒரு மாடோ ஒரு குதிரையோ மரிப்பதும் ஒரே வகையைச் சார்ந்தது தானா என்பதுதான். மனிதர்கள் மரிக்கும் போது, அத்துடன் அவர்களுடைய வாழ்வு முடிந்து போகிறதா? குறிப்பிட்ட காலவரைக்குள், நம்முடைய சுய ஆதாரம் எதுவுமின்றி, வாழ்கிற நிலையில், நமக்குத் தோன்றுகிற கேள்விக்குப் பதில் இல்லை, மரணத்தைக் குறித்த உண்மையை அறிய நாம் விரும்புவோமானால் தேவன் தான் பேச வேண்டும். இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பியதன் மூலம், அவர் ஒருவர் மரித்தால் ஒரு மிருகம் மரிப்பதற்கு ஒப்பானது அல்ல என்பதை தெளிவாக்கினார். ஆண்களும் பெண்களும் என்றென்றும் வாழ்பவர்கள். இவ்வுலகத்துக்கு அப்பாலும் நமது வாழ்வு தொடருகிறது. இது தான் உண்மை.*

*முடிவுரை:* *திருமறை ஜனங்களுக்கும் எல்லாக் காலங்களிலும் தேவனுடைய வெளிப்பாடாகிய சத்தியத்துக்குமிடையே ஒரு உறுதியான சங்கிலித் தொடராயிருக்கிறது. அந்த சத்தியம் அறிந்து கொள்ளத்தக்கது. சத்தியம் கீழ்ப்படியப்படவேண்டும். இந்த உலகின் முடிவில் கணக்கு ஒப்புவித்தல் இருக்கும் என்பது உண்மையே. இயேசு மறுபடியும் நியாயந்தீர்க்க வருவார்.*

## ***ஏவப்படுதல் (1:20, 21)***

*திருமறை தேவனால் ஏவப்பட்டு எழுதப்பட்டது எனும் போது அதை விசுவாசிகள் உறுதிப்படுத்த முற்படும் போது, கடினமான கேள்விகளுக்குப் பதில் அளிக்க வேண்டியவர்களாயிருக்கின்றனர். ஏவப்படும் செயல் எப்படி நடைமுறைபெறுகிறது? பரிசுத்த ஆவியானவர் ஒருவருடைய மனதை ஆக்கிரமித்துக் கொண்டு ஒரு செய்தியை அவர்களுடைய மனதிலே கொடுத்து அதன் மூலம் வெளிப்படுத்துகிறாரா? எழுதும் ஆசிரியர்களை ஒரு இயந்திரம் போன்ற கருவியாக ஆவியானவர் பயன்படுத்துகிறாரா? ஒரு ஏவப்பட்ட எழுத்தாளரின் சுய நினைவு, வார்த்தை அமைப்பு, மற்றும் அநுபவம் ஆகியவை எப்படி இந்தக் காட்சியில் இடம் பெறுகின்றன.*

*ஜான் ஸ்டாட் இந்தப் பாடத்தைக் குறித்து ஒரு ஆர்வமிக்க விவாதத்தைக் கொண்டிருந்தார்.[12] கிறிஸ்தவ விசுவாசத்தின் மிகப்பெரிய உறுதியான*

நிலைப்பாடுகளில் எதுவுமே கடினமானவையல்ல. சபைக்கடுத்த உபதேசக் கோட்பாடுகள் அனைத்தும் இரகசியத்தால் சூழப்பட்டுள்ளது. தேவன் இந்த அண்டசராசரங்கள் மேல் மகத்தானவர், அவரே அவற்றின் சிருஷ்டிகர், அல்லது அவரே இரட்சகர் என்று சொல்வது எளிதானதல்ல. அவருடைய சர்வ ஞானத்தைப் புரிந்து கொள்வது நமக்கு கடினமாயிருக்கிறது. தேவன் அன்பின் தகப்பனாக இருக்கிற அதே வேளையில் மனித வர்க்கத்தை நியாயந்தீர்க்கக் கூடியவராகவும் இருக்கிறார் என்பதைப் புரிந்து கொள்வது அவ்வளவு சுலபமல்ல. தேவனுடைய அனைத்து வழிகளையும் புரிந்து கொள்ளாமலேயே கிறிஸ்தவர்கள் தங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்கின்றனர். அவர்கள் தங்களிலுள்ள சகல கேள்வி சந்தேகங்களையும் நீக்கமற புரிந்து கொள்ளும் வரைக் காத்திருப்பார்களானால், எந்த ஒருவரும் ஒரு போதும் எதையும் விசுவாசிக்கப் போவதில்லை. நாம் விசுவாசிக்கப் போதுமான அளவு நாம் அறிந்திருக்கிறோம். நசரேயனாகிய இயேசுவுக்குத் தங்களை ஒப்புக் கொடுப்பதற்கு முன் தங்களுக்கு எந்தக் கேள்வியும் இல்லை என்கிற நிலையை அடையும் வரை கிறிஸ்தவர்கள் காத்திருப்பதில்லை.

கிறிஸ்தவனாக இருப்பது என்பது இயேசு எனும் நபரை உலகளாவிய வகையில் நியாயத்தீர்ப்பதாகும். அவரைக் கர்த்தர் என்று அறிந்து , நாம் நமது நம்பிக்கையை அவரில் வைக்கிறோம். தேவனைக் குறித்து அவர் நமக்கு வெளிப்படுத்தியவைகளை நாம் விசுவாசிக்கிறோம், ஒவ்வொரு முக்கியமான விஷயத்திலும், எல்லா பதில்களும் கிடைக்காமலேயே நாம் விசுவாசிக்கிறோம். வசனங்களில் உள்ள விசுவாசத்தைப் பொறுத்த மட்டில் அந்த விஷயத்தில், மற்றவைகளிலுள்ள விசுவாசத்தைப் போன்றே உள்ளது. வேத வசனங்கள் ஏவப்பட்டவையென நாம் உறுதிப்படுத்துகிறோம். ஏவுதல் என்றால் என்ன என்பது குறித்த கேள்விகள் கடினமற்றவையல்ல. இருந்தாலும், திருமறை முற்றிலும் உண்மையானது என்று உறுதிப்படுத்துகிறோம். அது நம்பத்தக்கது. மனுஷர்களைக் கொண்டு எழுதப்பட்டிருந்தாலும், தேவன் தம்மைக் குறித்து கொடுத்த வெளிப்பாடு இதுவே. அது இயேசு கிறிஸ்துவே அவருடைய குமாரன் என்று சாட்சியமளிக்கிறது. வெளிப்படுத்தப்பட்ட சகல இரகியங்களையும் அறிந்து கொள்ளாமல், திருமறை தேவனால் ஏவப்பட்டது என்பதை எவ்வித தயக்கமுமின்றி நாம் உறுதிப்படுத்துகிறோம்.

---

**குறிப்புகள்**

[1]Richard J. Bauckham *2 பேதுரு புத்தகத்தின் ஆசிரியர் பேதுரு என்பதை மறுத்திருக்கிறார், ஆனாலும் அவர், "மிக வேகமாக பாரம்பரிய யூதமத இலக்கியத்தை அநேகமாக அவர் சார்ந்திருக்கக் கூடும்" என்பதை ஒப்புக் கொள்கிறார், "அது ஏற்கனவே கிரேக்க மத மற்றும் தத்துவ அடிப்படையிலான வார்த்தைகளை கையாண்டுள்ளது …"* (Richard J. Bauckham, *Jude, 2 Peter,* Word Biblical Commentary, vol. 50 [Waco, Tex.: Word Books, 1983], 180. See Bauckham for examples of Peter's language in Hellenistic Jewish and pagan sources.) [2]F. W. Mattox and John McRay found their book title in this verse. (F. W. Mattox and John McRay, *The Eternal Kingdom: A History of the Church of Christ* [Delight, Ark.: Gospel Light Publishing Co., 1961].) [3]Fred B. Craddock, *Preaching* (Nashville: Abingdon Press, 1985), 159–63. Craddock also wrote, "There is a fiction abroad among preach-

ers that the familiar is without interest, without power, and without prophetic edge" (p. 45). [4]KJV *மொழிபெயர்ப்பில் இந்த வசனம் தொடர்ந்து ஒரு வாசகத்தைக் கொடுக்கிறது, இதற்கு சிறிதளவே வசனங்களின் ஆதாரமிருக்கிறது, ஆகிலும் அது புரிந்து கொள்ள எளிதானது. அந்த வாசகம், "உங்களை எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொள்வதில் அசதியாயிரேன்."* [5]See Michael Green, *The Second Epistle General of Peter and the General Epistle of Jude,* rev. ed., Tyndale New Testament Commentaries, vol. 18 (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1987), 89. *[6]கிரேக்க வார்த்தை exodos, நேரடிப் பொருளில் "ஒரு புறப்பட்டுப் போகுதல்" [7]*Eusebius *Ecclesiastical History* 3.39.15. [8]Ibid., 2.15.2. *[9]மத்தேயுவில் இந்த வார்த்தை 2 பேதுருவில் இருப்பதோடு ஒப்பிட்டால் வரிசைக்கிரமமாக இராது. ஆங்கில இலக்கணம் கிரேக்க மொழியின் வசன வரிசைக் கிரம வித்தியாசத்திற்கு இடங்கொடுப்பதில்லை. இப்படியாக "இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்" என்னும் மொழிபெயர்ப்பு ஒரே மாதிரியாக ஆங்கிலத்திலும் இடம் பெற்றுள்ளது.* [10]NEB *யில் பக்கத்தின் ஓரத்தில் இந்த வாசகம் காணுகிறது: "தீர்க்கதரிசிகளின் செய்தியிலிருந்து இன்னும் அதிகமான உறுதி எங்களுக்கு உண்டு."*

*[11]கடந்து போவோமாகில், தர்க்கம் செய்வதற்கு இந்த வசனத்தைப் பயன்படுத்தி, ஒருவர் எக்காரணத்தைக் கொண்டும் வசனங்களை மொழிபெயர்ப்புச் செய்யக் கூடாது. வசனங்கள் இருக்கிற வண்ணமாகவே எடுத்துக் கொள்ளப்பட வேண்டும், மொழிபெயர்ப்புப்படி அர்த்தம் கொடுப்பதோ, அல்லது இப்படியாக இருக்கலாம் என்றோ எடுத்துக் கொள்ளக் கூடாது என்று தர்க்கிப்போர் சிலரை நாம் காண்போம். அப்படிப்பட்ட வாக்குவாதம் பேதுருவின் கருத்தை முற்றிலும் இழந்து போகச் செய்கிறது. வசனங்கள் எப்பொழுதெல்லாம் ஊடகமாகக் காணப்படுகிறதோ, அது வசனமாயிருந்தாலும் அல்லது பொதுவான உரையாடலாக இருந்தாலும், தேவையான வார்த்தைகளைப் பெறுபவர் அவைகளை விளக்கிச் சொல்லவும் வேண்டும். திருமறை வார்த்தைகளை மொழியாக்கம் செய்யாமலேயே ஒருவர்அப்படியே அவைகளை உள்ளீர்த்துக் கொள்ள முடியாது.* [12]John Stott, *The Contemporary Christian* (Leicester, U.K.: Inter-Varsity Press, 1992), 178–79.